[illegible]

V 12 No 7, July 1936

1929-30

JL
211,N 193A
N30.12.7
10788

395

REGD NO: M 1530.

# "BALAVINODHINI"







CHILDREN'S FRIEND

# பாலவிநோதினி

குழந்தைகளின் அன்பன்

ஆசிரியர்:
வரகவி திரு. அ. சுப்பிரமணியபாரதி

Vol XII | JULY 30. | № 7



PRINTED AND PUBLISHED
BY
V. RAMASWAMY SASTRULU & SONS
*323, Tiruvottiyur High Road*
*Tondiarpet. MADRAS.*

*N. B:*—The Subscribers are requested to pay subscriptions to our agents only on obtaining our *Bonafide* receipts.

***All Rights Reserved by the Publishers.***

# பாலவிநோதினி

## CONTENTS—பொருளடக்கம்


| | |
|---|---|
| | பக்கம். |
| தெய்வ வணக்கம் ... ... ... | 289 |
| ஹிதோபதேசம் ... ... ... | 290—293 |
| குடிப்பழக்கங் கொண்ட குரு ... | 294—299 |
| தேன் ... .... ... ... | 299 |
| அரிய பழமொழிகள் ... ... | 300 |
| கவிராஜ சந்திரர் ... ... ... | 301—302 |
| நடராஜப் பத்து .... ... ... | 303—304 |
| சபாநாதர்பேரில் முத்துத்தாண்டவர் கீர்த்தனை 3 ... ... ... | 305 |
| துளசியின் பெருமை ... ... | 306—311 |
| உலக ஞானமில்லாத வேதாந்தியின் கதி | 312 |
| ஏன் சிரிக்கிறாய்? ... .... ... | 313—314 |
| சிவலிங்க தரிசன பலன் ... ... | 314 |
| நல்ல மாணாக்கன் ... ... ... | 315—319 |
| ஹாஸ்யம் ... ... ... ... | 319 |
| மாதர்களே இதைப் படியுங்கள் ... | 320—321 |
| மாதர்களுக்கு இன்னொரு செய்தி ... | 322 |
| நாயால் வந்த தொல்லை ... ... | 323—324 |
| ஆடிப்பதினெட்டும் அதன் மகிமையும் | 325—327 |
| கணவனோடெதிர் பேசாதிருப்பதே மனைவிக் கழகு ... ... | 328—330 |
| பூமியும் பூபதியும் ... ... ... | 331—332 |
| புருஷனுக்குத் தூக்கு தண்டனை ... | 333—334 |
| ஓர் ஆச்சரிய விவாகம் ... ... | 334 |
| இலவச மூலிகை சிகிச்சை ... | 335—336 |
| வசீகரமுள்ள பல் வைத்தியர்கள் ... | 336 |

# சுபத்தைத் தரும் வெகுமானங்கள்

ஒச்சமில்லாத இரத்தினங்களை அமைத்துச் செதுக்கிய நகைகளைத் தரிப்பவர்களுக்கு அவ்விரத்தினங்கள் வெகு சுப பயன்களைக் கொடுக்கும் என்று பழைய காலத்திலிருந்து நமது பெரியோர் நம்பி வருகிறார்கள். அவ்விதமான ஆபரணங்களையே நமது நாட்டாருக்குக் கொடுக்க வேண்டுமென்னும் விருப்பமொன்றே ஆதிகாலத்திலிருந்து எங்கள் கருத்து. ஆகையால் 36 வருஷத்திற்கு முன் நாங்கள் இந்த வியாபாரம் துடங்கியது முதல் ஒச்சமில்லாதவையும் உயர்ந்த நீரோட்டமுள்ளவையுமான இரத்தினங்களை பதித்த நகைகள் விற்று வருகிறோம். எங்கள் நகைகள் இம்மாதிரியானவை என்று நாங்கள் உத்திரவாதமாயிருப்பதுதான் எங்களிடம் நகை வாங்குபவர்களுக்கு முழு ஜாமீனாகும்.

வைர வியாபாரத்தில் நாங்கள் இவ்வளவு பெருமையடைந்ததற்குக் காரணம் என்னவென்றால், நமது நாட்டாருடன் நம்பிக்கையாயும் குற்றமின்றியும் வியாபாரம் செய்து வருவதேயாம்.

ஆகையால் எங்களிடமிருக்கும் கைதேர்ந்த வேலைக்காரரின் உதவியை நீங்கள் பெற்றுக் கொண்டு, அதனாலுண்டாகும் நற்பயன்களை நீங்கள் அனுபவிப்பதே உங்களுக்கு லாபகரமான வேலை.

**சுராஜ்மல் லல்லூபாய் அண்ட் கோ,**
நகை வியாபாரிகளும், உயர்ந்த வெள்ளி
சாமான்கள் செய்பவர்களும்,
313, எஸ்பிளனேட், மதரூஸ்

அலங்காரத்திற்கும் ஸ்நானத்திற்கும்
சிரேஷ்டமானது எங்கள்

**மணித் தைலம்**

தலைக்குத் தடவி வந்தால் உஷ்ணம் சமனமாகி தலைமயிர் நன்றாக நீண்டு வளரும்.

5-துலம் தைலம் கொண்ட புட்டி 1-க்கு ரூ. 1
கேட்லாக் இனாம்.

**ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,**
26, பிராட்வே, மதராஸ்.

ஏஜண்டு:---
R. பெருமாள் நாயுடு,
மெடிகல் ஹால், கும்பகோணம்.

---

மஹாபாரதம்

தமிழ் வசனம்

நல்ல உயர்ந்த கிளேஸ் பேபரில் ஆப்டோன் படங்களுடன் 600 பக்கங்களுக்குமேல் அச்சிடப்பட்டுள்ளது. பாரதம் படிப்பவர்களுடைய பாபத்தைப் போக்கவல்லது; காரியசித்தியை அளிக்கத் தக்க மகிமையை உடையது. சகல ஞானத்தையும் போதிக்கத் தக்கது. ஆதலால் பெரியோர் இதனை ஐந்தாம் வேதமென்றும் கூறுகின்றனர். இந்த வசனம் பிரசங்க ரத்ஞாகரம் வித்வான் த. சண்முகக் கவிராயர் என்பவர் எழுதியது. இந்நூலை வாசிப்பவர் பிரசங்கவன்மையை அடைவதுடன் இனிய வசனம் எழுதும் பாஷா ஞானத்தையும் பெறுவார். ஆதலால் இந்த நூலை வாங்கிப் படிக்க வேண்டியது நம் தமிழ் நாட்டு ஸ்த்ரீ புருஷர்களுடைய கடமைகளிலொன்றாகும். மற்றைய பருவங்களும் விரைவில் அச்சாகிவருகிறது.

ஆதிபர்வம் காலிகோ பயிண்டு விலை ரூபா **3-8-0.**

சபா, ஆரண்ய விராடபர்வம் (இம்மூன்றுமடங்கியது)விலை ரூ **5-0-0**

V. RAMASWAMY SASTRULU & SONS,
***392, Esplanade, Madras***

# FEDERATED INDIA

**(An All—India English Weekly)**

***PUBLISHED EVERY WEDNESDAY***

**Annual Subscription Rs. 5.**

PLEASE APPLY TO:—
THE MANAGER,
'FEDERATED INDIA,'
TONDIARPET, MADRAS.

---

# THE LAW OF ELECTION

**BY**

**K. L. NARASIMHA RAO,**

*Advocate, High Court, Madras.*

Contains all the Acts, Rules, Regulations, and Forms, brought up-to-date regarding Elections to every Statutory Body from the Village Panchayat to the Council of State. Indispensable to every public worker and practitioner.

**Price Rs. 3-8-0.** *(Postage Extra.)*

"SRI RAMA PRESS" *3, Sivaramulu Chetty St.,*
*Tondiarpet, MADRAS.*



வாசிப்பதற்கு இனிமையானதும் நற்புத்தி புகட்டக்கூடியதுமான இப்புத்தகம், தேவையுள்ளவர்கள் இன்றைக்கே தருவித்து வாசியுங்கள்.

ராஜ வைத்திய
நாராயணஜீ கேசவஜீ,
நெ. 1/94, சைனா பஜார் ரோட். சௌகார்பேட், மதராஸ்.

---

## Moral class reading books for the young

BY

**Varakavi Tiru: A SUBRAMANYA BHARATI**

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| இராமாயண இரகசியம் | 0 | 12 | 0 |
| ஸ்ரீராமச்சந்திரன் — நல்ல பிள்ளை | 0 | 2 | 6 |
| பரதன் — நல்ல தம்பி | 0 | 3 | 0 |
| ஸீதாதேவி — நல்ல மனைவி | 0 | 4 | 0 |
| குகன் — சிறந்த நண்பன் | 0 | 2 | 6 |
| மாருதி — நல்ல அடிமை | 0 | 2 | 6 |
| விபீஷணன் — சிறந்த பக்தன் | 0 | 1 | 6 |

*For Copies, please apply to :—*

**BALAVINODINI OFFCE,**

323, Tiruvottiyur High Road, MADRAS.

---

**MADAN MANJARI PILLS**

பூலோக அமிர்தமென்று புகழப்படுகின்ற இம்மாத்திரை அஜீரணம், மலசிக்கல், ரத்தக்குறைவு இவைபோன்ற சாதாரண வியாதிகளையும், நரம்புத்தளர்ச்சி நபும்சகத்துவம், இவைபோன்ற விசேஷ வியாதிகளையும் நீக்கி இளமையைக் கொடுப்பதில் சிகரற்றது.

**40-மாத்திரைகள் அடங்கிய டப்பியின் விலை ரூ. 1 0 0**

மதன மஞ்சரி ஆபீஸ். 1/94, சைனா பஜார் ரோட், மதராஸ்

எங்கும் புகழ்பெற்ற

## பி. வி. ராஜன் பட்டணம் பொடி




காரம், மணம், குணம், நிறம், வாசனை முதலிய எல்லாவற்றிலும் மேன்மையுற்றது. நெ. 1 ஸ்பெஷல் ரகம் பொடி வீசை 1-க்கு விலை ரூபா 4. டை சாதா ரகம் பொடி வீசை 1-க்கு விலை ரூபா $3\frac{1}{2}$.

டாக்டர் B. S. மல்லையா M.B., & C.M., & M.L.C. அவர்களால் பரிசோதிக்கப்பட்ட

**B. S. சுகந்த மூக்குத்தூள்**

விலை பாடில் 1-க்கு அணா 4. டஜன் 1-க்கு ரூபா 2 4 0 டை ஒரு சேர் டின் 1-க்கு ரூபா. 1 12 0

விபரங்களுக்கு எழுதவும். வி.பி. ரயில் சார்ஜ் வகைரா பிரத்யேகம்.

விலாசம்:—பி. வி. ராஜன் அண்டு கம்பெனி,
நெ. 44, கோவிந்தப்ப நாயக்கன் வீதி, மதராஸ்.
தந்தி விலாசம் "நஸ்யம்"

---

## மதனகாமேஸ்வர லேகியம்

இது மிக்க பலமும், வீரியவிருத்தியு முண்டாக்குவதில் மிக்க சிரேஷ்டமானது. மேகம், வெட்டை, பலயீனம், சுக்கிலநஷ்டம், நீர் வியாதி முதலான நோய்களை நீக்கி பலமும், காந்தியும், சம்போகசக்தியும், சந்தானபிராப்தியு முண்டாக்குவதில் நிகரற்றது.

இரண்டு டப்பிகள் போதுமானது.

| | | | |
|---|---|---|---|
| 20 தோலா டப்பி 1-க்கு ரூபா ... ... | 1 | 4 | 0 |
| வி.பி. சார்ஜு ... ... ... ... | 0 | 6 | 0 |

**பி. சி. ஏ. அண்ட் கம்பெனி,**

ஆயுர்வேத சமாஜம், பெரிதேபி, நெல்லூர் ஜில்லா.

# ஸ்ரீ மகாபாரத வசனம்.

பாரதப் பிரசங்கி யென்று பெயர் பெற்றவரும் வித்வசிரோமணி யெனச் சிறப்புற்றவருமாகிய ந. சண்முகக் கவிராயரவர்கள் இயற்றியது. பாலவிநோதினிப் பத்திரிகாசிரியர், வரகவி திரு. அ. சுப்ரமண்ய பாரதி யவர்களால் பரிசோதிக்கப் பெற்றது நல்ல உயர்ந்த வெள்ளை காகிதத்தில் வெகு நேர்த்தியாய் அச்சிடப்பெற்றது. இதுவரையில் இதுபோன்ற பதிப்பு வெளிவந்ததே கிடையாது. கலாசாலைக்கும் லைப்ரேரிக்கும் உபயோகப்படக்கூடிய சிறப்புடையதாய்க் கெட்டி கலிகோ பயிண்டு செய்தது.

சண்முகக் கவிராயரவர்களுடைய வசனநடை நல்ல பாஷாஞானத்தையும், சிறந்த வாக்கையும் கொடுக்கக்கூடிய தென்பதும் பாமரருக்கும் எளிதில் விளங்கக்கூடிய தென்பதும் தமிழ் மக்களின் பெரும்பான்மையோர் நன்குணர்வர்.

பாரதம் இதிகாச ரத்னமென்றும் ஐந்தாவது வேதமென்று புகழத்தக்க பெருமை யுடையதென்றும் அதிலில்லாத நீதிகளே கிடையா வென்றும் ஆஸ்திக புத்தியைக் கொடுத்து ஒழுக்கத்தில் நிலை நிறுத்தக்கூடிய போதனைகளை அளிக்கக்கூடியதென்றும் பெரியோர்கள் கொண்டாடப்படுவதாகையினால் தமிழ் நாட்டில் ஒவ்வொருவருடைய வீட்டிலும் மக்கள்கையில் பூஷணமாக விளங்கவேண்டியது மிகவும் அவசியமாகும்.

| | | ரூ | அ. | பை. |
|---|---|---|---|---|
| 1. | ஆதிபர்வம் ... ... ... | 3 | 0 | 0 |
| 2. | சபாபர்வம், ஆரண்யபர்வம், விராடபர்வம் உத்தியோகபர்வம் இவை நான்கும் சேர்ந்து ஒரே பயிண்டு விலை ரூபா ... | 5 | 0 | 0 |
| 3. | பீஷ்மபர்வம், துரோணபர்வம், கர்ணபர்வம், சல்லியபர்வம, சவுத்திகபர்வம், ஸ்ரீபர்வம், சாந்திபர்வம், அநுசாசனிபர்வம, அசுவமேதபர்வம் ஆசிரமவாசபர்வம், முசலபர்வம், மகாப்ரஸ்தானிகபர்வம், சொர்க்காரோகணபர்வம் இவை பதின்மூன்றும் ஒன்று சேர்ந்தது. ஒரே பயிண்டு. இது அச்சிலிருக்கிறது. விலை. | 5 | 0 | 0 |

இம் மூன்று வால்யூம்களையும் சேர்த்தாற்போல் ஒரே காலத்தில் வாங்குகிறவர்களுக்கு விலை ரூபா 12-8-0.

வாவிள்ள ராமஸ்வாமி சாஸ்த்ருலு அண்டு ஸன்ஸ்,
292, எஸ்பிளனேட், மதராஸ்.

# தமிழ் பாலபோத இலக்கணம்.

இந்த இலக்கணம், சுமார் அறுபது வருஷங்களுக்கு முன் சிறந்த இலக்கண வித்துவானாக விளங்கிய விசாகப் பெருமாளையரவர்கள் இயற்றியது. சூத்திரங்களெல்லாம் இனிய வசன நடையில் பாலர்கள் எளிதில் தாமே படித்து உணரக்கூடிய முறையில் விரிவாயும் பல உதாரணங்களுடனும் விளக்கப் பட்டிருப்பது இதற்குள்ள சிறப்பாகும். பால விநோதினிப் பத்திரிகாசிரியர். வரகவி - திரு - அ. சுப்ரமண்ய பாரதியவர்களால் பழைய பிரதிக்கிணங்க நன்கு பரிசோதிக்கப் பெற்றது. பள்ளிக்கூட மாணவர்களுக்கும் தனியே தமிழ்ப் பாஷையில் தேர்ச்சிபெற விரும்பிப் படிப்பவர்களுக்கும் இந்த நூல் சாலப் பயன் படக்கூடியதாகையினால் இதனை உயர்ந்த காகிதத்தில் வெகு நேர்த்தியாய் அச்சிட்டிருக்கிறோம். கலாசாலைத் தலைவர் இதனைத் தங்கள் பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்குப் பாடப் புத்தகமாகவேனும் பள்ளிக்கூட லைப்ரெரிக்கேனும் உபயோகப் படும்படி சிபார்சு செய்வார்களானால் அது பேருபகாரமாகும்.

விலை ரூ. 1—0—0

வாவிள்ள ராமஸ்வாமி சாஸ்த்ருலு அண்டு ஸன்ஸ்,
292, எஸ்பிளனேட், மதராஸ்.

2 10788.

# தமிழ் நூல்கள்

உயர்ந்த கிளேஸ் காகிதத்தில் பிழையில்லாமல் அச்சிடப்பட்டவை.

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| **திருக்குறள் விளக்க நூல்கள் (குறிப்புரையுடன).** | | | | |
| திருக்குறள் (பரிமேலழகர் உரை பாகெட் சைஸ்) | | 2 | 0 | 0 |
| திருக்குறள் மூலம் (காலிகோ பைண்டு) பாகெட் சைஸ் | ... ... | 0 | 6 | 0 |
| **வெண்பாக்கள்.** | | | | |
| சிவசிவவெண்பா (குறிப்புரையுடன்) | ... | 0 | 2 | 0 |
| சோமேசர் முதுமொழி வெண்பா | ... | 0 | 2 | 6 |
| இரங்கேச வெண்பா | ... ... | 0 | 2 | 0 |
| ஆத்திசூடி வெண்பா | ... ... | 0 | 1 | 6 |
| திருத்தொண்டர் வெண்பா | ... ... | 0 | 1 | 6 |
| **திரட்டு நூல்கள்.** | | | | |
| திருவருட்பா | ... ... | 0 | 6 | 0 |
| திருப்புகழ் | ... ... | 0 | 2 | 0 |
| பட்டினத்தார் திருப்பாடற்றிரட்டு | ... | 0 | 3 | 0 |
| தாயுமானசுவாமிகள் திருப்பாடற்றிரட்டு | ... | 0 | 4 | 0 |
| தேவாரத் திருமுறைத் திரட்டு | ... ... | 0 | 10 | 0 |
| **இலக்கணமும், நிகண்டும்.** | | | | |
| நன்னூல் மூலம் | ... ... | 0 | 3 | 0 |
| நேமிநாதம் | ... ... | 0 | 2 | 0 |
| புறப்பொருள் வெண்பா மாலே | ... ... | 0 | 7 | 0 |
| பதினோராவது நிகண்டு | ... ... | 0 | 6 | 0 |
| சேந்தன் திவாகரம் | ... ... | 0 | 2 | 0 |
| பாலபோத இலக்கணம் (விசாகப் பெருமாளையர்) | ... ... | 1 | 0 | 0 |
| **வசன நூல்கள்.** | | | | |
| ஆன்ரூர் சரித்திரம் (எம். வி. ஈஸ்வரய்யர்) | ... | 0 | 5 | 0 |
| கதாமஞ்சரி | ... ... | 0 | 4 | 0 |
| ஜீவகாருண்ய ஒழுக்கம் | ... ... | 0 | 4 | 0 |
| மனுமுறைகண்டவாசகம் | ... ... | 0 | 5 | 0 |

வாவிள்ள ராமஸ்வாமி சாஸ்த்ருலு அண்டு ஸன்ஸ்,
292, எஸ்பிளனேட், மதராஸ்



சிதம்பரம் கோயில்.

பாலவிநோதினி புஸ்தகம் XII இன் சஞ்சிகை 251-ம் பக்கம் பார்க்கவும்.

உ

செந்திலாண்டவன் திருவடி துணை

# பாலவிநோதினி

அல்லது

## குழந்தைகளின் அன்பன்

ஒரு மாதாந்தப் பத்திரிகை


| | | |
|---|---|---|
| தொகுதி 12 | 1930 ௵<br>ஜுலை மாதம் | பகுதி 7 |


### தெய்வ வணக்கம்

உடலெடுத் தறிவுநான் பெற்றவக் காலமுதல்
உன்னையல்லாமல் வேறே
ஒருவரைப் பொருளென்றுமதியாது நினது புகழ்
ஓதிமன மகிழு மென்பால்
மடையுடைந்தா லென்ன வருள்பொழியு மீராறு
மலர்க்கட் கடைக்கணித்து
மகிதலத் தெய்து மிடை யூறுருவண்ணம் நீ
வாழ்விக்க வேண்டுமமலா
கடலெடுத்துண்ட குடமுனிவனுக் கருள் செய்த
காருண்ய வடிவேலனே
கனக மாமயிலேறி விளையாடும் வனவல்லி
கஜவல்லி மனமோகனே
படமெடுத் தாடும்விட அரவின் மிசை நடனமிடு
பாலகோபாலன் மருகா
பழமறைக டருசீல மழவிடைய ரருள்பால
பழனிமலைமுருகேசனே.

(பாரதி.)

## ஹிதோபதேசம்

(1) எல்லாம் வல்ல பரம்பொருளினிடம் நமபிக்கை, அந்தப் பரம்பொருளைப் பிரார்த்தித்தல், நல்ல காரியங்களையே செய்தல், மானிட வர்க்கத்தாரிடம் நேசமா யிருத்தல், நம்மினும் அறிவுடையாரிடம் மரியாதையா யிருத்தல்—ஆகிய இவை போன்றவைகளே உலகத்தில் தோன்றியுள்ள சகல மதங்களினுடைய போதனையா யிருக்கின்றன. இவற்றில் எந்த மதக்காரருக்கும் வித்யாசம் கிடையாது. ஆகையினால் வெளிப்படையான சில ஆசார வேறு பாடுகளினால் மதபேதம் எண்ணி மயங்குவது மதியாகாதென்றுணர்க.

(2) அவரவருடைய மதம் அவரவர்க்கு உயர்வாகும். அவரவர்கள் தொழுந் தெய்வம் அவரவர்க்கு உயர்வாகும். அவரவருடைய பெற்றோர்களே அவரவர்க்கு மேலானவர்க ளாவார்களன்றோ? ஆகையினால் என் மதம் உயர்வுடையது உன் மதம் தாழ்வுடையது—என்று பேசாமல் அந்த அந்த மதங்களிலே உள்ள பொதுவான அபிப்பிராயங்களைப் போற்றி வருவதே மதியாகும்.

(3) பிரமசரியம், வானப்பிரஸ்தம், ஸந்நியாஸம், கிரகஸ்தம்—என நான்கு ஆசிரமங்களுண்டு. அவைகளில் கிரகஸ்தாசிரமமே சிறந்ததென்று பெரியார் அபிப்பிராயப்படுகிறார்.

(4) ஒருவன் நம்மைச் சாட்சியாக விரும்பினால் அப்பொழுது நாம் உண்மையையே சொல்லவேண்டும். இல்லாவிட்டால் அவனுடைய முன்னேழு வம்சங்களும் பின்னேழு வம்சங்களும் அவனும் நரகத்தில் விழ நேரிடும். ஒன்றும் சொல்லாம லிருந்தாலும் அந்தப் பாபமே சம்பவிக்கும்.

(5) ஜீவ ஹிம்சை செய்யாம லிருப்பது தான் சகல தருமங்களிலும் முதன்மையான தருமம். பிராமணன் எந்த ஜீவனையும் ஹிம்சிக்கக் கூடாது. சாந்த குணத்தை வகிப்பவனே பிராமணனாவான். கொல்லாமை, பொய் சொல்லாமை, பொறுமை, வேதாத்தியயனம்—செய்தல் இவைகள் பிராமணனுக்கு முக்ய தர்மம்.

(6) தானியம், பொன், பசு, பெண்கள் இவைகளில் எவ்வளவு கிடைத்தாலும் ஆசை யடங்குவதில்லை. ஆகையினால் நாம் நமது மனத்தை யடக்கிக்கொண்டு திருப்தி யடையவேண்டும்.

(7) கடிவாளத்தைப் பிடித்துக் கொள்கிறவன் சாரதியாவானோ? ஆகமாட்டான். முரட்டுக் குதிரையையும் அடக்கி யாள்கிறவனே சாரதியாவான். அது போல் கோபத்தை அடக்கித் தன்னைத் தன் வசத்தில் வைத்துக் கொள்கிறவனே மனிதனாவான்.

"உள்ளங் கவர்ந்தெழுந் தோங்குஞ் சினங்காத்துக்
கொள்ளுங் குணமே குணமென்க—வெள்ளம்
தடுத்த லரிதோ தடங்கரைதான் பேர்த்து
விடுத்த லரிதோ விளம்பு"

என்றார் மேலோர்.

(8) நல்ல குல ஸ்திரீகளுக்குக் கணவனே தெய்வம். அறிய வேண்டியவற்றை அறிந்த புத்திரர்க்குப் பெற்றோரே தெய்வம். முழுதுந் துறந்த மகத்துக்களுக்கு ஆசிரியர் தெய்வம். மற்றவர்களுக்கெல்லாம் மன்னனே தெய்வம்.

(9) பொறாமை, பேராசை, கோபம், கடுஞ்சொல் ஆகிய நான்கினையும் விட்டொழித்து, இயன்ற வரையில் தருமம் புரிந்து மனம் வாக்குக் காயங்களினால் உபகாரங்களைச் செய்து, அந்த உபகாரங்களைத் தான் வைத்துக் கொள்ளாமல் பகவானுக்கு அர்ப்பணம் செய்வதே புண்யமாகும்.

(10) உலகத்திலே சார்பில்லாதவர்க்கு நிலையிராது. முதலில்லாதவர்க்கு இலாப மிராது. பணமில்லாதவர்க்கு வேசையின் உறவிராது. பசி வேளையில் உண்டிடாதவர்க்கு உறுதி நிலை யிராது. உண்மை யில்லாதவர்க்குத் தரும மிராது. முயற்சியில்லாதவர்க்குச் செல்வமிராது. சோர்வில்லாதவர்க்குப் பயமிராது. சுகமில்லாதவர்க்கு ஆசை யிராது. துர்க்குணமில்லாதவர்க்கு எதிராளிகளிரார். தீங்கு செய்யும் தீயவர்க்கு இரக்கமிராது. இவை யெல்லாம் உலகத்தில் இயல்பிலேயே காணக்கூடியவை.

(11) பிறரை ஏமாற்றும் வழக்கமுடையவர் தாங்களும் ஏமாறாமலிரார். பிறரைப் பழிப்பவர்கள் பிறரால் பழிப்பை அடையாமலிரார். பிறரைக் கெடுக்க நினைப்பவர்களும் கெடுப்பவர்களும் தாங்களும் அக்கேடுகளை அடையாமலிரார்.



(12) ஒருவனுக்கு ஏற்பட்டிருக்கும் நல்ல நடவடிக்கைகளோ கெட்ட நடவடிக்கைகளோ யாவும் அவன் செய்து வருகிற சகவாசதோஷத்தினாலேயாம். பிறக்கும்போதே உண்டாவனவல்ல. சகவாச தோஷத்தினால் ஏற்படும் நடவடிக்கை ஒருவனை அவனுக்குத் தெரியாமலே அதாவது அவன் கற்றுக்கொள்ளாமற் போனாலும் தாமே வந்து அவனைப் பற்றிக் கொள்ளும். பொடி, சுருட்டு, பீடி முதலியவற்றை உபயோகிப்பவர்களைப் பார்த்து, "உங்களுக்கெப்படி இப்பழக்கங்களுண்டாயின?" என்று கேட்டால் அவர்கள்—காரணம் தெரியவில்லை. பொதுவாய்ச் சகவாச தோஷமென்று தெரிகிறது. ஆனால் இவை எப்படி எந்த விதத்தில் பிடிபட்டனவோ அது சொல்லத் தெரியவில்லை என்பார்கள். ஆகையினால் நல்ல சகவாசஞ் செய்யுங்கள். அற்ப சகவாசம் பிராண சங்கடம். நல்ல சகவாசம் ஞானப் பிரகாசம்.

---

பெருங்காற்றானது உயர்ந்து பருத்த மரத்தையே முறிக்கும். தாழ்ந்து மெலிந்த மரத்தை முறிப்பதில்லை. ஆதலினால் நான் என்கிற கர்வங் கொண்டு தலை நிமிராதே. தண்டனை கிடைக்கும்.

## குடிப்பழக்கங் கொண்ட குரு

தேவர்களுக்குக் குரு பிரஹஸ்பதி யென்பவர். அசுரர்களுக்குக் குரு சுக்கராசாரியார் என்பவர். தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் அடிக்கடி சண்டை நடப்பதுண்டு. அப்படி ஒரு சமயம் இருதிறத்தவர்க்கும் பெரும்போர் மூண்டது. அதில் இருதிறத்தவரிலும் அநேகரிறந்தனர். அசுர குருவாகிய சுக்ராசாரிக்குச் சஞ்சீவினி என்கிற மந்திரம் தெரியும். அதனால் அவர் போரில் இறக்கும் அசுரர்களை யெல்லாம் பிழைத்தெழும்படி செய்து வந்தார்.

பிரஹஸ்பதிக்கு அந்த மந்திரம் தெரியாது. ஆகவே இவர் பக்கத்திலிருந்த தேவர்களில் அநேகர் அழிந்து போயினர். அவ்வாறு இனி நேராதிருக்கக் கருதிய பிரஹஸ்பதி, தம்முடைய புதல்வன் கஜன் என்பவனை அழைத்து, "நீ போய் சுக்கராசாரியாரை யடுத்து சஞ்சீவினி மந்திரம் கற்றுக்கொண்டு வா. அப்பால் நம்மவரில் இறப்பவர்களை நாம் பிழைப்பிக்கலாம். ஆகையினால் நீ கருத்துடனிருந்து அவர்க்கு உபசாரங்கள் பல செய்து அவரை மகிழ்வித்து, அந்த மந்திரத்தை யெப்படியாவது கற்றுக்கொண்டு வா" என்று கூறி யனுப்பினார்.

கஜன் தன் தந்தை கட்டளைப்படி சுக்கராசாரியிடம் போய் அவரை ஆசிரியராக அடுத்து அவர் விரும்



பும் பணிவிடைகளை யெல்லாம் குறிப்பறிந்து செய்து வந்தான். சுக்கராசாரிக்குத் தேவயானை யென்று ஒரு பெண்ணிருந்தனள். அவளும் தன்னிடம் சந்தோஷமடையும்படி கஜன் மிகப் பணிவாக நடந்து வந்தான்.

கஜன் ஆயிரம் வருஷம் பணிவிடை செய்வதாகச் சுக்ராசாரியிடம் உறுதி கூறி யிருந்தான். அதன்படி ஐந்நூறு வருஷம் வரையில் பணிவிடை செய்து வந்து அவர் மனங் கோணாமல் நடந்து வந்தான்.

கஜன் சஞ்சீவினி மந்திரத்துக்காகச் சுக்ராசாரியரை மாணவனாக அடுத்திருப்பது அசுரர்களுக்குத் தெரிந்தது. அவர்கள் கஜனிடம் பகை கொண்டு அவனை எப்படியாவது கொன்று விடுவதெனத் தீர்மானித்தவர்களாய் அதற்குத் தக்க சமயம் பார்த்துக் கொண்டிருந்தனர்.

கஜன் சுக்கராசாரியருடைய மாடுகளைக் காட்டுக் கோட்டிக் கொண்டு போய் மேய்ப்பது வழக்கம். அப்படி ஒரு நாள் அவன் காட்டில் மாடுகளை மேய்த்துக் கொண்டிருந்தான். அசுரர்கள் அவனை அப்பொழுது அடித்துக் கொன்று நாய்க்குப் போட்டு விட்டார்கள். அது தேவயானைக்குத் தெரிந்தது. தேவயானை கஜனிடம் அன்புடையவளாதலால் அவன் கொல்லப்பட்டானென்று கேட்டதும் துக்கமடைந்து, தன் தந்தையினிடம் போய் அழுது அவனை எழுப்பும்படி வேண்டினாள்.

சுக்ராசாரியார் சஞ்சீவினி மந்திரம் ஜபித்து அவனைப் பிழைப்பித்தார். சுக்ராசாரியார் சகல சாஸ்திரங்

களும் உணர்ந்தவரானாலும் அவரிடம் மது வருந்தும் கெட்ட வழக்க மிருந்தது. இக்காலத்திலும் வித்வான் களிற் சிலர் குடிப்பழக்க முடையவரா யிருப்பதை நாம் பார்க்கிறோ மல்லவா?

தங்கள் குருவுக்கு அப்பழக்க மிருப்பது அசுரர் களுக்குத் தெரியுமாதலால் அவர்கள் கசனை ஒரு நாள் கொன்று மதுவிற் கலந்து அதனைச் சுக்ராசாரிக்குக் கொடுத்து விட்டார்கள். ஆஹா! குருவுக்கேற்ற சிஷ்யர் கள்!

குடிப்பவர்கட்குத் தங்களுக்கு நேரிடக்கூடிய இன்ப துன்பங் கூடத் தெரியாது. மிருகப் பிராயமா யிருப்பார்கள். சுக்ராசாரியாரும் மந்தமா யிருந்தபடி யால் அசுரர்கள் மதுவிற் கசனைக் கொன்று கலந்திருப் பதை உணராமல் பருகி விட்டார்.

கசனைக் காணாத தேவயானை வருத்தமுற்று, அவ னைப் பிழைப்பிக்கும்படி பிதாவை வேண்டிக் கொண் டாள். கசன் தம்முடைய வயிற்றுக்குள் மதுவுடன் கலந்திருப்பது அவர்க்குத் தெரியாதல்லவா? அதனால் அவர் முன் எழுப்பியது போல் அவனை உயிர்ப்பிக்கச் சஞ்சீவினி மந்திரம் ஜபித்தார். கசன் உடனே அவரு டைய வயிற்றுக்குள்ளே உருக்கொண்டு "சுவாமி" என் றழைத்து "என்னைப் புதல்வனைப் போல் அன்பு பாராட்டி ஆதரிக்க வேண்டும்" என்று வேண்டிக்கொண் டான்; அசுரர்கள் தனக்குச் செய்த தீங்கையும் சொன் னான்.



இப்பொழுது சுக்ராசாரியார் தரும சங்கடத்திற் சிக்கிக்கொண்டபடியால் வெகு நேரம் ஆலோசனை செய்து கசனை அழைத்து "உன் எண்ணம் ஈடேறு கிறது. மந்திரத்தைப் பெற்றுக் கொள். நீ வெளியே வந்த பின் என்னைப் பிழைப்பி" என்று கூறிச் சஞ்சீவி னியை உபதேசஞ் செய்தார்.

கசன் அவருடைய வயிற்றைப் பிளந்துகொண்டு வெளியே வந்து மந்திரம் ஜபித்துச் சுக்ராசாரியரைப் பிழைப்பித்தான்; அவரை வணங்கி விடை கொண் டான்.

சுக்ராசாரியார் மதுபானத்தின் தீங்கை இப்போ துணர்ந்தார். குடியினால் ஹிருதயங் கெட்டுப் பலவித நோய்களுண்டாய் முடிவில் மரணமும் நேரிடும். உயி ருடனிருக்கிற காலத்தில் தீராத வறுமையையும் அடைந்து அல்லல் பல அடைவது திண்ணம். குடி குடியைக் கெடுக்கும். மிடியைக் கொடுக்கும். ஜன சமூ கத்திற்குள் அவமானத்தை யுண்டாக்கும்—என்பதை நம் நாட்டில் சிறுவரு முணர்வர். உணர்வரானாலும் அப்பழக்கத்திற்கு எப்படியோ பலர் ஆளாய் வருத்த முறுகின்றனர்.

சமீபத்தில் குடியனொருவன் ஒரு நாள் மிதமிஞ் சிக் குடித்து விட்டுத் தன் மனைவியைக் காரணமின்றி அடித்தான். அவள் அடி பொறுக்க மாட்டாமல் வீட்டை விட்டோடி ஒரு பர்லாங் தூரத்திலிருந்த தன் அண்ணன் வீட்டிற்குப் போய் அண்ணனிடம் முறையிட் டழுதாள்.

அண்ணன் சினங் கொண்டோடி வந்து குடியனை மிரட்ட குடியன் அவனை யடிக்க வந்தான். அதனால் அவன் பெருங் கோபமடைந்து கைக் கத்தியினால் குத்த அவன் இறந்துபோனான்.

இப்படிப்பட்ட குடிவெறியினால் அநந்தம் தீங்குகள் விளைகின்றன. இதனாலே தான் குடியை ஒழிக்க வேண்டுமென்று நம்முடைய பெரியார் பாடுபட்டு வருகின்றனர்.

சென்னையில் சில வருஷ காலத்திற்கு முன் ஒரு வித்வானிருந்தார். அவர் எழுதிய புத்தகங்கள் பலவுண்டு. அப்படியிருந்தும் அவரிடம் குடிப்பழக்கம் அதிகமா யிருந்தது. அவர் மாதம் நூறு ரூபாய்க்குக் குறையாமல் சம்பாதித்துக் கொண்டிருந்தார். ஆயினும் அவர் வறுமைக்குத் தோழனா யிருந்ததுமல்லாமல் அழுக்குப் படிந்ததும் கிழிந்து கந்தையானதுமான ஆடை யுடுத்துப் பிச்சைக்காரனைப் போல் திரிந்தார். ஒரு சமயம் அவர் தாம் வேலையிலிருந்த இடத்தில் எஜமானிடம் தம்முடைய மனைவி இறந்து விட்டதாகவும் பிணமெடுக்கப் பணம் வேண்டுமென்று பொய் கூறிப் பணம் பெற்றுப் பின் அது பொய் என்று எஜமானனுக்குத் தெரிந்தபோது பெரிய அவமானமு மடைந்தார். அநேக சமயங்களில் தாம் எழுதிய நூல்களில் இரண்டொன்றைத் தாமிருந்த ஆபீஸிலிருந்து திருடிக் கொண்டு வந்து பாதி விலைக்கு விற்றுக் காசைக் குடியில் கரியாக்கி யிருக்கிறார். அவர் ஆயுள் நாளெல்லாம் அவ்வாறே கழிந்தது.



அவர் இறந்து போனபோது அவரைப் பற்றி யெழுதிய ஒரு பத்திரிகை—"இந்தப் பெரியார் எழுதிய புத்தகங்களில் ஒவ்வொன்று எடுத்து அடுக்கி இவரை வைத்துத் தீ மூட்டிவிட்டால் போதும். இவரை யெரிக்க வேறு விரட்டிகளேனும் விறகுகளேனும் வேண்டாம்". என்று குறிப்பிட்டது. அவ்வளவனந்தம் நூல்கள் எழுதிய இவரிடம் குடிப்பழக்க மிருந்ததென்றால், 'பழக்கம் விடுவதில்லை, என்பதும்' 'தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்' என்பதும் வீண் போவதில்லை என்று தெரிகிறதல்லவா?

குழந்தைகளே! மறந்தும் தீய பழக்கங்களுக்கு இடந்தராதீர்கள். தீயவருடன் கூடுவதனாலேயே தீய பழக்கமுண்டாகும். ஆகையினால் முதலில் அவ்விஷயத்தில் சர்வ ஜாக்ரதையா யிருந்து நல்ல பிள்ளைகளெனப் பேரெடுக்கப் பாருங்கள்.

---

## தேன்

தேனை இளஞ்சூடாய்க் காய்ச்சி நுரை நீக்கி வைத்துக் கொண்டு கண்களிற் போட்டுவரக் கண் இரணம், அரிப்பு கூச்சம், கண்கட்டி, வெள்ளெழுத்து முதலியவை நீங்கும்.

தேன் பலம் நான்குடன் ஒருபலம் அரிசித் திப்பிலியை ஆர்க்கத் தூள்செய்து போட்டு ஒருவாரம் வைத்திருந்து பிறகு காலை மாலை இரண்டு வேளைகளிலும் ஒரு தேக்கரண்டியளவு நன்றாய்க் குலுக்கிச சாப்பிட்டுவர. சுவாசகாசம், மந்தாரகாசம், ஈளை, இறைப்பு, கபம், க்ஷய ஜுரம் முதலியவைகள் நீங்கும்.

மரக்கிளையிலிருந்து எடுக்கப்படும் கொம்புத்தேன் திரிதோஷத்தையும் உஷ்மாந்தத்தையும் அரோசகத்தையும் நீக்கும். அரைத்துப் பிழிந்து வண்டலை நீக்கிய இஞ்சிச்சார் அரைரூபா எடையும் தேன் அரைரூபா எடையும் சேர்த்துச் சாப்பிட்டுவர அரோசகம் நீங்கும்.

# அரிய பழமொழிகள்.

(1) கெட்டபால் நல்லபாலாவதில்லை! செல்லா காசு செல்வதில்லை. அதுபோல் கெட்டகுணமுடைவனும் நல்ல வழிக்குத் திரும்புவதரிதாகும்.

(2) நாயறியாது ஒரு சந்திப்பானை
மலடியறியாள் மக்களின் அருமை
ஈனனறியான் மானியின் தன்மை
அகப்பை யறியாது அடிசிலின் சுவை,

இவைபோல் கீழோர் அறியார் மேலோர் பெருமை.

(3) பெற்றதாயாயினும் எத்தனை குற்றம் பொறுப்பாள்?—பொறுப்பதருமை. அதனாலேதான் கருணையங் கடலாகிய கிருஷ்ணபரமாத்மா சிசுபாலனிடம் நூறுகுற்றம் பொறுத்துப் பின் அவன் அதிக்கிரமித்தபடியால் வதஞ்செய்தார்.

(4) அறுகங்கட்டையும் ஆபத்துக்கு உதவும்
சிறுதுரும்பும் பல்லுக்குத்த உதவும்
சிறுதுரும்பும் கலத்தண்ணீரைத் தேக்கும்

ஆதலால் சிறுவன் இவனால் நமக்கு என்ன உதவியிருக்கப்போகிறதென்று யாரையும் அலட்சியம் செய்வது கூடாது.

(5) பழுத்தபழம் கொம்பிலிருப்பதில்லையல்லவா? அதுபோல் வயது சென்ற கிழவர்களும் மரணமடைகிறார்கள். ஆகையினால் அவர்கள் இறந்தமை கண்டு மனம் வருந்தல் பேதைமையாகும்.

210788

# கவிராஜ சந்திரர்

கத்தியவார் ஸமஸ்தானத்தில் வவானியா என்று ஓர் ஊரிருக்கிறது. அந்த ஊரில் கவிராஜ சந்திரர் என்பவர் பிறந்தார். கவிராஜ சந்திரர்—பம்பாயில் பிரபல தேசாபிமானியாக விளங்கிய டாக்டர் மேத்தாவுக்கு உறவினர். கவிராஜ சந்திரர் சதாவதானம் செய்யும் திறமை வாய்ந்தவர். அதாவது ஏக காலத்தில் நூறு விஷயங்களில் கவனம் செலுத்தக்கூடியவர். அவர் சிறந்த சாமர்த்தியசாலி. அப்படி யிருந்தும் அவர் தமது சாமர்த்தியங்களைக் கொண்டு தம்மை விளம்பரப்படுத்திக் கொள்வதில் விருப்பமில்லாதவர்; சமய ஞானத்தில் மிகுந்த சிரத்தையுடையவர். ஆசாரங்களை மேற்கொண் டொழுகும் தூயவர். அவர் மிக எளியருக்கும் எளியரா யிருப்பவர். அவர் ஜயினர். ஜயினராயினும் இதர மதத்தாரிடம் தாராள நோக்கமுடையவரா யிருந்து பெருமை பெற்றார்.

இத்தகைய யோக்யதை யுடைய அவர்க்கு இங்கிலாந்து சென்று படிப்பதற்குரிய சௌகரிய மிருந்தது. இருந்தும் அவர் அங்கே சென்று ஆங்கிலம் படிக்க விரும்பவில்லை. அவர்க்குப் பாடசாலைப் படிப்பு மிகக் குறைவு தான். ஆனால் சிறந்த அறிஞர். அவர்க்கு குஜராத்தி பாஷை நன்றாய்த் தெரியும். அந்த பாஷையின் மூலமாய் இஸ்லாம், கிறிஸ்துமதம், பார்ஸிமதம் முதலிய மதங்களின் உண்மைகளையும் அவர் கூடிய வரையில் அறிந்து கொண்டார். அவர், மதக்கிரந்தங்

களைப் படிப்பதில் மிகுந்த ஆர்வமுடையவர்; அஹிம்சையில் அதிகப்பற்றுடையவர்; சிறு புழுக்களையும் அவர் உலகத்திலுள்ள மற்ற உயிர்களைப்போல் பாவித்து வந்தார். அந்தோ! அவர் தமது முப்பத்து மூன்றாவது வயதில் காலமாயினர். ஆஹா! மரணத்தைக் கடக்க வல்லவர் யாவர்? மரணம் யாரையும் விடுவதில்லை.

கவிராஜ சந்திரரைக் காந்தியடிகள் நன்றாயறிவர். அவர், சந்திரரைப் பரிபூரணத் தன்மையை நெருங்கியவரென்று புகழ்கிறார்; அவரைப் பற்றிப் புகழ்வார் பலருண்டு. ஆனால் அவரைப் பின்பற்றுவார் அவ்வளவாக இல்லை யென்கிறார். அவருடைய உபதேசங்கள் பலவாம். அவைகளைத் திரட்டி ஹிந்தியில் மொழி பெயர்க்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதாம். "கவிராஜ சந்திரரின் கூட்டுறவே என்னை இந்த நிலைமைக்குக் கொண்டு வந்த" தென்று காந்தியடிகள் கூறுகிறார்.

நல்ல ஸ்நேகத்தைப்போல் ஒருவனை யோக்யதையில் உயர்த்துவதும் திய ஸ்நேகம்போல் ஒருவனைத் தாழ்த்துவதும் இல்லை யென்று கூறுவதுண்டு. அது இவ்வரிய நண்பரிடம் பலிதமானது காண்க.

---

நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும்
என்றும் இறைவன் இணையடி எண்ணு.

## நடராஜப் பத்து

(முன் தொடர்ச்சி)

நொந்து வந்தே னென்று ஆயிரஞ் சொல்லியும்
செவியென்ன மந்த முண்டோ
நுட்பநெறி யறியாத பிள்ளையைப் பெற்றபின்
நோக்காத தந்தையுண்டோ
சந்ததமும் தஞ்சமென் றடியைப் பிடித்தபின்
தளராத நெஞ்சமுண்டோ
தந்திமுக னறுமுகனிரு பிள்ளையில்லையோ
தந்தை நீ மலடுதானோ
விந்தையும் ஜாலமும் உன்னிடமிருக்குதே
வினையொன்று மறிகிலேனே
வேதமும் சாஸ்திரமு முன்னையே புகழுதே
வேடிக்கை யிதுவல்லவோ
இந்த உலகீரேழு மேனளித்தாய் சொல்லு
இனியுன்னை விடுவதில்லை
ஈசனே சிவகாமிநேசனே யெனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே. (5)

வழிகண்டிங் குன்னடி துதியாத போதிலும்
வாஞ்சை யில்லாதபோதும்
வாலாயமாய்க் கோயில் சுற்றாதபோதிலும்
வஞ்சமே செய்தபோதும்
மொழியதனை முகனையில்லாமலே பாடினும்
மூர்க்கனே முகடாகினும்

மோசமே செய்யினும் தேசமேகவரினும்
முழுகாமியே யாகினும்
பழியெனக்கல்லவே தாய்தந்தைக் கல்லவோ
பார்த்தவர்கள் சொல்லார்களோ
பாரறிய மனைவிக்குப் பாதியுடலீந்தநீ
பாலனைக் காக்கொணுதோ
எழில்பெரிய அண்டங்கள் அடுக்காயமைத்தநீ
என்குறைகள் தீர்த்தல்பெரிதோ
ஈசனே சிவகாமிநேசனே யெனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே. (6)

---

(வரும்.)

ஆமிஜான்ஸன் என்ற ஆங்கிலமாது இருபது நாட்களில் 10,400 மைல்தூரம் பறந்து உலகமெங்கும் பேர்பெற்றுளாம். இம்மாது பி எப் பட்டம் பெற்றிருக்கிருள். வயது இருபத்திரண்டு. பதினெட்டுமாதங் கட்கு முன் இவள் பறக்கக்கற்றுக் கொண்டாளாம். சக்ரவர்த்தி சக்ரவர்த்தினிமுதல் ஆயிரக் கணக்கானபேர்கள் அவளுக்கு வாழ்த்துச் செய்தி அனுப்பியுள்ளார்.

பெர்லின் நகரவீதிகளில் 4,78000 மரங்களைவைத்து வளர்த்து வருகிறுர்களாம், நகரத்தில் மட்டும் 4700 ஏக்கர் பரப்பு நந்த வனங்களிருக் கின்றனவாம். பெர்லின்வாசி ஒவ்வொருவனுக்குச் சராசரி 35 சதுரகஜம் சுத்தமான இடமிருக்கிறதாம்.

மகாத்மாகாந்தி சிறையிலிருந்து மறைந்துபோய்ச் சத்யாக்ரக ஆச்சிரமத்தில் எழுந்தருளியதாக ஒரு செய்தி பரவியது. அது பொய்யாநிஜமா என்று அவரை அவர் மனைவியார் கண்டுகேட்க அவர் அது பொய் யென்று கூறினாராம்.

## 3 முத்துத்தாண்டவர் கீர்த்தனம்.

இராகம்—தோடி ஏகதாளம்.

பல்லவி

இன்னமொரு ஸ்தலம் இன்னமொரு கோயில்;
இன்னமொரு தெய்வம்—இப்படியுண்டோ?

அநுபல்லவி

பொன்னம்பலத்தினிற் பூமலராலயன்—போற்றுஞ் [சிதம்பரர்
பொற்பதமேயல்லால்— (இன்)

சரணங்கள்

1 காசிகழுக்குன்றம் காளாஸ்திரி கச்சி
கமலாலயந்திரு வண்ணுமலை யுறை
ராசியமானதெய்வங்கட் கொடுக்கமும்
நடனமுமிங்கே களினமு மிங்கே (இன்)
2 பாலானசந்திரர் சூரியர் மண்டலம்
பாரிந்திரன்பதி பற்றிய மண்டலம்
பூலோகத்திற்குக் கைலாசம் வைகுந்தம்
பிர்ம்ம மண்டலத்துப் புதுமையுமிங்கே (இன்)
3 கரிசற் பிணிகள் பறந்து போஞ்சிவ
கங்கையில் முழ்கிக் கனகசபை வந்து
தெரிசித்த வளவினிற் றேவனு மாவன்
தெரிசித்தாரைக் கண்டாற் றேவனு மாவன் ()

(வரும்.)

# துளசியின் பெருமை

டாக்டர் திரு. மே. மாசிலாமணி முதலியார் 'தமிழரசு' பத்திரிகையில் எழுதுகிறார்:—

துளசியில் சாதாரண துளசி என்றும், கறுப்பு (கிருஷ்ண) துளசி என்றும் இருவகை உண்டு. இதைத் தவிர நாய்த் துளசி, நிலத் துளசி என்பனவும் உண்டு.

கிருஷ்ண துளசியும் சாதாரண துளசியும் ஏறக்குறைய ஒரே குணத்தை யுடையன.
கிருஷ்ண துளசியில் கொஞ்சம் காரம் அதிகமிருக்கலாம்.

ஜலிர்ப்பு, தொண்டைவலி, மார்புச்சளி, இவைகளுக்குத் துளசித் துவையல் மிக நல்லது.

மிளகை நெய்யில் வறுத்துக் கறிவேப்பிலை, உப்பு, புளிசேர்த்துத் துளசியை வதக்கித் துவையல் செய்து ஆகாரத்துடன் கொள்ளலாம்.

காலை வேளைகளில் துளசி இதழை மென்று தின்னச் சரீரத்திலுள்ள விஷச் சத்துள்ள கிருமிகள் நாசமடையும்.

துளசி மண்ணீரலிலும், குரல்வளை களிலும் வேலை செய்யக்கூடியது. மூளைக்குச் சுறுசுறுப்பை உண்டுபண்ணிப் புத்தி தீட்சண்ணியத்தை உண்டு பண்ணும்.



மிளகும் துளசியும் அரைத்துக் காலை மாலைகளில் கழற்சிக்காய்ப் பிரமாணம் உண்ண விஷஜுரம் நீங்கும்.

எலி, பெருச்சாளிக் கடிகளுக்கும் நாய்க்கடி, பூரான் கடி ஆக இவைகளுக்கும் துளசியை எலுமிச்சம் பழப் பிரமாணம் அரைத்துக் கொண்டு பாலில் கலந்து காலையில் உண்டு உப்பு, புளி, காரம் இன்றிப் பால் சர்க்கரை சேர்த்து ஆகாரம் சாப்பிட வேண்டும். இப்படி 3 நாள் சாப்பிட்ட பின் மறு பத்தியம் 3 நாள் வறுத்த உப்பு சுட்ட புளி சேர்த்துப் பதார்த் தங்களுடன் ஆகாரம் புசிக்கலாம்.

ஆகாரம் புசிக்காமல் காலி வயிற்றில் துளசியின் தளம் ஒன்றை நன்றாக மென்று தின்று தண்ணீர் அருந்தி வெறும்வயிற்றோடு 24 மணி நேரம் இருக்கும் பட்சத்தில் சரீரத்திலுள்ள சகல விஷங்களும் நீங்கிப் பரிசுத்தமான சரீரமாய்த் திகழும். பசி அதிகரிக்கும்.

துளசி தளத்தை மாத்திரம் நாள் ஒன்றுக்கு ஒவ்வொரு இதழாக மென்று தண்ணீர் அருந்துவதுடன் 6 தடவை உண்ணலாம்.

வாரத்திற் கொருமுறை அல்லது பட்சத்திற் கொருமுறை இப்படிச் செய்வதால் சரீர ஆரோக்கியம் ஏற்படும்.

இதனால் குன்ம வயிற்று வலி, அஜீரணம், விஷ ஜுரங்கள், கிராணிபேதி இவைகள் நீங்கிவிடும்.

கரு நாகம் அல்லது வேறு எவ்வித விஷப் பாம்புகள் கடித்தாலும் கருந் துளசியை அல்லது சாதா

துளசியை வேண்டிய அளவு தின்னச் செய்தால் உடனே விஷம் நீங்கி விடும்.

பாம்பு கடித்துப் பிரக்ஞையற்றுக் கிடப்பவர்களுக்கு மண்டையில் இரத்தங் காணக் கொஞ்சம் கீறித் துளசி இலையை வைத்துக் கட்டி விட்டுத் துளசியின் இரசம் பிழிந்து வாயிலும் மூக்கிலும் விடக் குணமாகும். சில சமயங்களில் கண்ணில் தீட்டவும் செய்யலாம்.

1927-ம் ஆண்டு சென்னை அங்கப்ப நாய்க்கன் வீதியிலிருந்து இரண்டு பிரபல மகம்மதிய வியாபாரிகள் ஞாயிற்றுக்கிழமையை வேட்டையில் கழிக்கச் செங்கல்பட்டு ஜில்லா காட்டுப் பாக்கம் காட்டுக்குச் சென்று மோட்டாரை ரஸ்தாவில் விட்டு விட்டு வேட்டையாடும் காலத்தில் துப்பாக்கியின் சப்தத்தைக் கேட்டுக் கோப மூண்டு வேகமாக ஓடிவந்து ஒருவரைப் பலமாய் ஒரு கரு நாகம் கடித்து விட்டு மீண்டும் அக் கோபாவேசத்துடன் கொஞ்சதூரம் சென்று திரும்பக் கடிக்க ஓடி வரும்போது கடியுண்டவர் பயந்து பாம்பைச் சுட்டதால் பாம்பு துண்டுகளாகச் சிதறுண்டுவிட்டது. உடனே அவர் கூச்சலிட்டு விட்டுப் பிரக்ஞை யற்று விழுந்து விட்டார். மோட்டார் ஓட்டி வந்து பார்த்து விஷயம் உணர்ந்து கூச்சலிட, அடுத்த பக்கம் சென்றிருந்த நண்பரும் வந்து சேர்ந்து அழ ஆரம்பித்த காலத்தில் சற்று தூரத்தில் உழுது கொண்டிருந்த கிழவர் ஒருவர் வந்து பார்த்து உடனே கருந் துளசியைக் கொண்டு வந்து தலையில் கீறிக் கட்டி விட்டு இரசம் வாயில் விட்டுச் சில நேரம் கழிந்த பின் பிரக்



ஞை பெற்று எழுந்து அவருக்கு அரை வீசைக்குக் காணக் கூடிய துளசியைக் கொய்து கொடுத்துத் தின்னச்செய்து அன்று முழுவதும் அதைத் தவிர வேறு ஒன்றும் புசிக்க லாகாது என உத்தர வளித்து மோட்டார் ஏற்றி அனுப்பிவிட அதன்படி அம் மகம்மதியர் ஒழுகிக் குணம் பெற்றுத் துளசியின் மகிமையை எல்லாப் பத்திரிகைகளிலும் பிரசுரம் செய்தார் என்பது பத்திரிகைகளை வாசிக்கும் நீங்கள் உணர்ந்த விஷயமே.

துளசிச் செடியை வாசம் செய்யும் வீட்டு முற்றத்தில் துளசி மடம் கட்டி வளர்த்து அதி காலையில் அதைச் சுற்றி பூஜை செய்து ஒரு தளத்தைக் கிள்ளிப் புசிப்பது சிலர் வழக்கத்தில் வைத்திருக்கின்றார்கள். (பார்ப்பனர்களின் வீடுகளில் கட்டாயமாய் வழங்கப்படுகின்றது.)

இப்படிச் செய்வதால் நமது சரீரத்தில் காணும் விஷங்கள் நீங்குவது ஒன்றும், இரண்டாவது விஷப் பூச்சிகள் வீட்டில் சேரா திருத்தல் ஒன்றும் ஆக இத் தகைய பெரிய உபகாரத்தைத் துளசி நமக்குத் தருவதால் அத்தகைய சஞ்சீவி யாகிய துளசியை வீட்டில் வைத்து வணங்குவது என்பது உணரக் கிடக்கின்றது.

தேள் கடிக்குத் துளசியைத் தின்று கொட்டின விடத்தில் தேய்க்க உடனே குணம் காணும்.

1922-ல் கட்டின, மாடி வீட்டில் நான் சென்று வாசம் செய்ய ஆரம்பித்த வுடன் அடுத்த வீடு தட்

டோடு போட்டிருந்ததால், மாலை 6 மணிக்கு வேனிற் காலத்தில் வரிசை வரிசை யாகத் தேள் புறப்பட்டுத் தளத்தில் வந்து சேரும். நாள் ஒன்றுக்கு ஒரு டஜனுக் குக் குறையாமல் அடிப்பது வழக்கமா யிருந்தது. இதைத் தடுக்க வேறு யோசனை தோன்ற வில்லை. கடைசியாய்க் கைப்பிடிச் சுவர்களில் வரிசையாய்த் தொட்டிகளில் துளசிச் செடிகளை வைத்து வளர்க்க ஆரம்பித்தேன். அது முதல் இன்று வரை ஒரு தேளாவது கண்ணில் கண்டது கிடையாது என்பதை வாசகர்களுக்கு உணர்த்துகிறேன்.

சில ஆண்டுகளுக்கு முன் ஐரோப்பியர் ஒருவர் வேட்டைக்குச் சென்றிருந்தார். அது சமயம் தான் வேட்டையாட மிருகங்களைத் துரத்தத் தம் சேவகன் ஒரு பக்கமும் நாய் ஒரு பக்கமும் தாம் ஒரு பக்கமும் போய் விட்டார்கள். சில மணி நேரம் கழித்துச் சந்தடி கேட்ட பக்கத்தில் ஐரோப்பியர் சுட அக் குண்டினடி எப்படியோ தம் சேவகனின் உடலில் ஊடுருவிப் போய்விட்ட காரணத்தால் துளசி நிறைந்த நிலத்தில் சாய்ந்து சேவகன் உயிர் துறந்தான். இவ்விஷயம் உணராத ஐரோப்பியர் தம் சேவகனைத் தேடித் தேடிக் காணாது முடிவில் வீடு திரும்பி ஏதாவது ஒரு மிருகத் தின் வாய்ப்பட்டு மடிந்திருப்பான் எனத் தீர்மானம் செய்து கொண்டு திருப்தி யடைந்திருக்கும் காலத்தில் சுமார் 6 மாதம் கழித்து மீண்டும் வேட்டைக்குச் சென்ற போது தம்முடைய நாய் மோப்பத்தால் சேவ கனின் சரீரத்தைக் கண்டு பிடித்து எஜமானனுக்கு அப் பிண மிருக்கும் இடத்தைக் குறியால் காட்டியதை



அறிந்த ஐரோப்பியர் மடிந்து கிடக்கும் தம் சேவ கனைப் பார்த்துத் தூக்கித்துத் துயரம் ஆற்றி இவ்வாறு யோசிக்க லாயினார். நாம் சுட்டு 6 மாதத்திற்கு முன் மரணமடைந்தவனின் சரீரம் நாற்றமின்றி எப்படி காக்கப்பட்டது. ஒரு,வேளை இன்றுதான் இறந்திருப் பானா? என்றாலும் நமது துப்பாக்கியின் குண்டே ஊடுருவி இருக்கின்றதே எனப் பல யோசனைகளால் சில மணி நேரம் கழிந்த பின் பிணம் வீழ்ந்து கிடக் கும் இடத்தை நோக்கிய போது துளசிக் காடாக இருந்தமையால் வேருடன் சில செடிகளை எடுத்துக் கொண்டு இல்லமேகி ஒரு பல்லியைக் கொன்று அம் மூலிகையால் மூடிச் சில நாள் பொறுத்து எடுத்துப் பார்த்தார். பல்லி வைத்த படியே இருக்கக் கண்டு வியப்புற்று அம் மூலிகையின் பெயர் துளசி என அறிந்து பலருக்கும் தனது ஆராய்ச்சியை வெளிப் படுத்தினார்.

சில வைஷ்ணவ நண்பர்கள் துளசிக் கட்டையை மணிகளாகச் செய்து மாலைகளாக அணிந்து கொள் வதைப் பார்க்கலாம். துளசி நம்மை இரட்சிப்பதால் இரட்சகனுடைய ஆபரண மாகவே கருதப் படுகிறது.

துளசி மாலையை அணிந்துள்ள புருஷர்களுக்கு விஷப் பூச்சிகளின் உபத்திரவம் ஏற்படாது. துளசிக் கட்டை மணியால் சரீரத்தில் காணும் விஷக் கிருமி கள் நாச மடையும்.

## உலகஞானமில்லாத வேதாந்தியின் கதி

ஒரு வேதாந்தி தன் ஊரைவிட்டு அயலூருக்குப் போனான். வழியில் ஒரு பெரிய ஆற்றைப் படகேறிச் சென்று கடக்க நேரிட்டது. அப்படிப் படகேறிச் செல்கையில் வேதாந்தி படகுக்காரனைப் பார்த்து "நீ வேதாந்தம் படித்திருக்கிறாயா?" என்று கேட்டான்.

படகுக்காரன்:—இல்லை என, வேதாந்தி, 'அப்படியானால் நீ உன் ஆயுளில் பாதிநாட்களை அநியாயமாய் இழந்துவிட்டாயே' என்று பரிதாபப்பட்டார்.

படகு நடு ஆற்றிற் செல்கையில் பலமான காற்றடிக்க ஆரம்பித்தது. படகு தத்தளித்தது. அப்பொழுது படகுக்காரன் வேதாந்தியைப் பார்த்து, "ஐயா, நீந்தத் தெரியுமா?" என்று கேட்டான். அவன் "நீந்தத் தெரியாது" என்றான். படகுக்காரன் "அப்படியானால் நீர் உம்முடைய வாழ்நாளையும் இழந்துவிட்டீர். இன்னும் கொஞ்சநேரத்தில் இப்போதடிக்கும் காற்றினால் இந்தப் படகு மூழ்கிப்போகவும் கூடும்" என்றான்.

வேதாந்தி இதைக் கேட்டு நடுக்கமடைந்து, 'அப்பா! நான் படித்துப் பாழாய்ப்போனேன். இப்போது என் பிராணன் உன் கையிலிருக்கிறது. ஜாக்ரதையாய்ப் படகைச் செலுத்திப் படகை அக்கரை கொண்டுபோய்ச் சேர். உன்னை என்றும் மறக்கமாட்டேன். இன்னும் இரண்டுமடங்கு கூலி தருகிறேன்,—என்றான்.

பல நூல்களைக் கற்றாலும் உலக ஞானமில்லையானால் அக்கல்வி பயன்படாதென்று அறிக.

## ஏன் சிரிக்கிறாய்?

சுந்தரன் என்பவன் சந்திரன் என்பவனுக்கு ஆயிரம் ரூபா கடன் கொடுத்திருந்தான். கெடுவானவுடனே சுந்தரன் சந்திரனிடம் வந்து பணத்தைக் கேட்டான். அவன் அப்பொழுது ஏதோ சாக்குச் சொல்லியனுப்பிவிட்டு அப்பாலும் அவன் வந்து கேட்டபோதெல்லாம் வருஷக் கெடுவாகச் சில வருஷங்கள் கெடுச்சொல்லி வந்து அப்பால் மாதக்கணக்காகச் சில மாதமும் பின் வாரக்கணக்காகச் சில வாரங்களும் அதன்பின் தினக்கெடுவாகச் சில தினங்களும் சொல்லிவந்தான்.

சுந்தரன் அவன் வீட்டுக்கலைந்து அலைந்து அலுத்துப்போனான். ஆயினும் ஒருநாள் சந்திரன் "நாளைய தினம் வா ஏதாவது வழிசெய்கிறேன். இது உறுதியான பேச்சு" என்று நம்பகமாகச் சொன்னான்.

சுந்தரன் அவன் பேச்சைக் கேட்டு மறுநாள் அவன் வீட்டுக்குப்போய் அவன் கொல்லையிலிருப்பதாக அறிந்து அவன் வீட்டுக்கொல்லைக்குப் போனான்.

சந்திரன் அப்பொழுது புளியங்கொட்டைகளை வரிசையாய்க் குழியில் போட்டுக்கொண்டேயிருந்தான்; ஆனால் சுந்தரனைக் கவனியாதவன் போலிருந்தான். சுந்தரன், "என்னடாப்பா இது! நான் வந்திருக்கிறேன்; கவனியாமலிருக்கிறாயே! இது தகுமா?" என்று கேட்டான்.

சந்திரன்:—நானா கவனிக்கவில்லை. உன் காரியந் தான் செய்கிறேன். தெரியவில்லையா?—என்றான்.

சுந்திரன்:—ஆனால் சந்தோஷம் பணம் கொடுத் தனுப்பு சீக்கிரம்—என்றான்.

சந்திரன்:—இதோ குழியில் புளியங்கொட்டைகளைப் போடுகிறேனே. இவையெல்லாம் வளர்ந்து மரமாய்க் காய்த்தவுடன் முதற்காய்ப்பிலே வருகிற புளியின் பணத்தை உம்முடைய கடனுக்குக் கொடுத்துவிட்டு மறுவேலை பார்க்கிறேன். தயை செய்து பொறுத்துக்கொள்'' என்றான்.

இதைக் கேட்டுச் சுந்திரன் வயிற்றெரிச்சலுடனே சிரித்தான். சந்திரன், "ஓ! என் சிரிக்கிறாய்? கடனுக்கு வழி பிறந்துவிட்டதென்றா?—நியாயம்'' என்றான்.

பாபுசாமி ராவ்.

## சிவலிங்க தரிசன பலன்

தங்கம் கனகம் மேருவரை
தான மளித்தல் ஒருகோடி
மங்குல் அளகக் கன்னியரை
வளர்த்து அளித்தல் ஒருகோடி
தங்கம் தருகோட்டுடை தீம்பால்
சுரபி அளித்தல் ஒருகோடி
இங்குயாவு மெய்து பலன்
இலிங்க தரிசனைக் கிணையாமால்

ஸ்ரீ நடராஜ சபை,
வண்ணாரப்பேட்டை.

## நல்ல மாணாக்கன்

நல்ல மாணாக்கனிடம் கீழ்ப்படிதல் என்கிற அருமையான குணமும் பள்ளிக்கூடத்து வாத்தியார்களுக்கு அடங்கி நடத்தல், ஆசிரியன் கூறியவழி கிற்றல் முதலிய உத்தமகுணங்களும் விளங்கும். ஒரு தரம் கூறியதையே மீண்டும் மீண்டும் கூறி ஆசிரியருக்குத் தொந்தரவு கொடுக்கமாட்டான். அவன் எதைச் சொல்ல விரும்புகிறானோ அதை உடனே சொல்லிவிடுவான். அல்லது செய்வதானாலும் உடனே செய்வான். பள்ளிக்கூடத்திற்கு நேரந்தவறாமல் போய் வருவான். பள்ளிக்கூடம் சென்றதும் தன்னிடத்தில் உட்கார்ந்து, தன் பாடத்தைக் கவனித்து வருவான். அங்குமிங்கும் பார்த்து விளையாடமாட்டான். வகுப்புப் பிள்ளைகள் தன்னைப் படிப்பதினின்றும் கலைக்கப்பார்த்தால், அதற்கு இடங்கொடாமல், தன்புத்தகத்திலேயே கவனம் செலுத்தித் தன் பாடங்களைச் சரியாய் ஒப்புவிக்கப் பார்ப்பான். சோம்பேறித் தனத்துக்குச் சிறிதும் இடங்கொடான். வகுப்பில் மற்ற பிள்ளைகள் பாடம் ஒப்புவிக்கும்போது, அவர்கள் வாயிலிருந்து வெளிப்படுவனவற்றை மிகவும் ஜாக்கிரதையாகக் கவனித்து வருவான். அவனுடைய முக்கியமான எண்ணம் கல்வியில் தேர்ச்சியடைய வேண்டுமென்பதே யாகையால், அவன் தன் லக்ஷியத்தை அடைவதில் கண்ணாயிருப்பான். ஒவ்வொரு நாளும் அவன்

புதிதுபுதிதான விஷயங்களை கற்றுக் கொள்வதில் துறையாயிருந்து கற்றுக் கொள்வான். முதல் நாள் கற்றதைப் பார்க்கிலும் மறு நாள் இன்னும் சிறிது கற்றுக் கொள்ளாவிடில் அவன்மனம் திருப்தியடையாது. கஷ்டமான பாடங்களையேனும், அல்லது எழுத்து வேலையையேனும் உபாத்தியாயர் கொடுத்து விட்டால், அதற்காக முணு முணுக்க மாட்டான். தன்னால் செய்ய முடியாத வேலையைத் தனக்குத் தன் உபாத்தியாயர் கொடுக்க மாட்டாரென்பதை அவன் நன்றாய் அறிவான். உபாத்தியாயர் எதைச் செய்யச் சொல்லுகின்றாரோ, அது தன்னுடைய நன்மையின் பொருட்டென்றே கருதுவான். ஆகையால் அவன் தன் வேலையைக் கிரமமாக முடித்து விடுவான். அதிகமான பாடம் தனக்குக் கொடுக்கப்படுங் காலத்தில் அவன் பின் வருமாறு நினைத்துக் கொண்டு தன் மனத்தைத் தேற்றிக் கொள்வான்.

‘நான் இந்தக் கஷ்டமான பாடங்களைப் படித்துக் கற்றுக் கொண்டிருக்கிறேன்; என் தாய் தந்தையர் இதை அறியின், அவர்கள் மிகவும் சந்தோஷிப்பார்கள். என்னுடைய உபாத்தியாயர்கள் என்னுடைய புத்தி சாலித் தனத்திற்கு மெச்சுவார்கள். நானும் என்னுடைய வேலை முடிந்தமைக்குச் சந்தோஷப் படுவேன். எவ்வளவுக் கெவ்வளவு சீக்கிரமாகவும் எவ்வளவு மனப் பூர்த்தியாகவும் என் வேலையைச் செய்ய ஆரம்பிக்கிறேனோ அவ்வளவுக் கவ்வளவு என்வேலை நன்றாய் முடியும்’ என்று எண்ணித் தைரியங் கொள்வான். நல்ல



நடத்தை யுள்ளவனாயிருக்க முயலுவான். கடவுள் தன்னை எப்போதும் கவனிக்கிறார் என்பதையும், அவருக்குத் தான் செய்யும் செய்கைகள் எல்லாவற்றிற்கும் பதிற் சொல்ல வேண்டுமென்பதையும் அவன் மறவான்.

மாணாக்கர் இலக்கணம் கூறப்போந்த இலக்கண நூலார்,

“அன்னமாவே மண்ணொடுகிளியே
இல்லிக் குடமா டெருமை நெய்யரி
அன்னர் தலையிடை கடைமாணாக்கர்”

என மாணாக்கரை, தலைமாணாக்கர், இடைமாணாக்கர், கடைமாணாக்கர் என்று மூவகுப்பினராக்கி, அன்னத்தையும் பசுவையும் முதல் மாணாக்கருக்கு உவமித்தார்; மண், கிளி இவைகளுக்கு உவமையாகக் கூறினர் இடைமாணாக்கரை; இல்லிக்குடம், ஆடு, எருமை, பன்னாடை இவைகளைக் கடைமாணாக்கருக் குவமித்தார்.

அதாவது—அன்னம், பாலையும் நீரையும் வேறு பிரித்துப் பாலை மாத்திரம் குடித்தல் போல, முதல் மாணாக்கர் குணத்தையும் குற்றத்தையும் வேறு பிரித்துக் கொள்ளுதலாலும், பசு, மிகுந்த புல் நிறைந்த இடத்தைக் கண்டால், அப்புல்லை வயிறுநிறைய மேய்ந்து பிறகு ஓரிடத்திற் போய்ப் படுத்து சிறிது சிறிதாக வாயில் வருவித்துக் கொண்டு மென்று தின்பதுபோல, முதல் மாணாக்கர் மிக்க கல்வியையுடைய ஆசிரியரைக்

கண்டால் அக்கல்வியைத் தன்னுள்ள நிறையக் கேட்டுப் பிறகு ஓரிடத்துப் போயிருந்து சிறுது சிறிதாக நினைவிற் கொண்டு வந்து சிந்திப்பராதலாலும் அவருக்கு அவ்விரண்டும் உவமிக்கப்பட்டன.

மண், உழவர் வருந்திப் பயிர் செய்யும் முயற்சியினளவினதாகவே விளைவைத் தன்னிடம் காட்டல் போல், இடை மாணாக்கர் ஆசிரியன் வருந்திக் கற்பிக்கு முயற்சிக்குத் தக்கதாகவே கல்வியறிவைத் தங்களிடம் காட்டுவதாலும், கிளி, தனக்குக் கற்பித்த சொல்லையன்றி வேறொன்றையும் சொல்ல மாட்டாமை போல், இடைமாணாக்கர் தமக்குக் கற்பித்த நூற் பொருளையன்றி வேறொரு நூற்பொருளையும் சொல்ல மாட்டாமையாலும் அவருக்கு அவ்விரண்டும் உவமிக்கப் பட்டன.

இல்லிக் குடமாவது, பொத்தக்குடம்; பொத்தலுண்டான குடம் தன்னுள் வார்க்குந்தோறும் நீரை ஒழுகவிடுதல் போலக் கடையாணாக்கர் நூற்பொருளைக் கற்பிக்குந்தோறும் மறந்துகொண்டே வருவதாலும், ஆடு ஒரு செடியில் தழை நிறைந்திருந்தாலும் வயிறு நிறைய மேயாமல், செடிகள் தோறும் போய் மேய்தல் போலக் கடைமாணாக்கர் ஓர் ஆசிரியனிடத்து மிகுந்த கல்வி இருந்தாலும் அவரிடம், கற்றுக் கொள்ளாமல், பலரிடத்தும் போய்ப் பாடங் கேட்டலாலும், எருமை குளத்து நீரைக் கலக்கிக் குடித்தல் போல கடைமாணாக்கர் ஆசிரியனை வருந்திப் பாடங் கேட்டலாலும்,



பன்னாடை, தேன் முதலிய வற்றைக் கீழே நழுவ விட்டு, அவற்றிலுள்ள சக்கைகளைப் பற்றிக் கொள்வது போலக் கடைமாணாக்கர் நல்ல பொருளை மறந்து விட்டுத் தீய பொருளைச் சிந்தித்துப் பற்றிக் கொள்ளுதலாலும் அவருக்கு இந்நான்கும் உவமிக்கப்பட்டன.

குழந்தைகளே! இம்முறையாம் எழுதியுள்ள இவ் வியாசத்தைக் கருத்துடன் படித்து அதன்படி நடக்க முயல்வீர்களானால் நீங்கள் கல்வியில் அபிவிருத்தியடைவது மன்றிப் பிறகு வாழ்விலும் பெருமையடைவீர்களென்பதிலையமில்லை.

## ஹாஸ்யம்

ஒரு செட்டியார் தருமசிந்தனை யென்பதில்லாமல் தன் மனம் போனபடி நடந்து வந்தார். ஒருநாள் ஒரு பிச்சைக் காரன் அவரிடம் பிச்சை கேட்டான். அவர் “அதோ அங்கே ஒரு பிரபுவீடிருக்கிறது, அங்கேபோ பிச்சைகிடைக்கும்.” என்று விரல்நீட்டி அவ் வீட்டைக் காட்டினார். அப்பால் அவர் இறந்தபின் எமனிடம் சித்திரபுத்திரன் அவருடைய பாவ புண்ணியங்களை வாசிக்கையில் அவர் செய்த புண்ணியம் விரலினால் பிரபுவீட்டைக் காட்டினாரே அது ஒன்றுதான் என்று தெரியவந்தது. அதனால் எமன் கடுங்கோபங் கொண்டு அவர் செய்த பாபங்களுக் கெல்லாம் கடுந் தண்டனையும் புண்யத்திற்குச் சிறிதிரக்கமுங் காட்டினான். அதுகண்ட செட்டியார், “பிரபுவே, என்னை இன்னொருதடவைப் பூலோகத்துக்கு அனுப்புங்கள். பெரும்புண்யஞ் செய்து நல்லவனாகிறேன்” என்று கேட்டுக் கொண்டார். அப்படியே எமனனுப்ப அவர், ஈயாப்பத்தனாகவே யிருந்தார். ஆயினும் ஒரு தடவை தம்மிடம் வந்த பிச்சைக்காரனுக்குத் தம் உடல் முழுவதும் அசைத்துப் பிச்சையிடும் வீட்டைக்காட்டித் தாம் பெரும் புண்யம் செய்து விட்டதாக மகிழ்ந்தாராம்.

# மாதர்களே இதைப் படியுங்கள்

பதி பக்தியும் தெய்வ பக்தியும் இந்திய மாதர்களிடம் குடி கொண்டிருக்கின்றன. ஒரு தேசத்தின் எதிர்கால நிலைமையை ஒழுங்குப்படுத்துவதோ அல்லது அழிப்பதோ அத்தேச மாதர்களிடமிருக்கும் சக்தியேயாம். தேசத்தின் பிரஜைகளைக் காப்பாற்றும் பொறுப்பு மாதர்களிட மிருக்கிறது. ஒரு தேசத்தின் வீரர்களைத் தயாரிப்பது அத்தேசத் தாய்மார்களுடைய கடமையேயாகும். மாதர்களின் கடமையானது குழந்தைகளைப் பெற்று விடுவதோடு முடிவதல்ல. அக்குழந்தைகளைத் தக்கபடி பயிற்றுவிக்கும் ஆற்றலும் தாய்மார்களுக்கிருக்க வேண்டும். குழந்தைகள் தேகபலம் மனோபலம் ஆற்றல் அறிவு முதலியவற்றுடன் விளங்கும்படி அவர்களைப் பாதுகாக்கக் கூடியவர்களாகத் தாய்மார்களிருத்தல் வேண்டும்.

தாய்மார்கள் உயர்ந்த கருத்துக்களையும் நல்ல நடவடிக்கைகளையும் போதிக்கக் கூடிய நூல்களைப் படித்துத் தேர்ச்சி பெற்றிருந்தால்தான் அவர்கள் தம் மக்களுக்கும் அக் கல்வியைப் புகட்டுதற்கு இயலும். இந்திய மாதர்கள் தங்கள் குழந்தைகளுக்கு மேல்நாட்டு உடைகளை மேல்நாட்டு நாகரிக முறையால் அணிவதையும் ஆங்கிலம் முதலிய இராஜ பாஷையில் குழந்தைகளுடன் பேசுவதையும் பெருமையாகக் கொள்வதாகாது. தாய் பாஷையிலேயே பெற்றோர்கள் மக்களுடன் பேசவேண்டும். குடும்பத்திலுள்ளவர்களுக்கெல்லாம் நல்ல பரிசுத்தமான ஆகாரம் அளிக்கப்படுவதா என்பதிலும் சுதேச சாமான்கள் வாங்கப்படுகின்றனவா என்பதிலும் மாதர்கள் அதிகக் கவனம் செலுத்த வேண்டும். இந்திய மாதர்கள் குடும்ப வேலையை மட்டும் கவனித்தாற் போதாது. சமூக சேவையிலும் ஈடுபட்டுச் சமூக முன்னேற்றத்துக்காகவும் தம்மாலியன்றவரையில் பாடுபட வேண்டும்—என்று சென்னை அடையாறு பிர்மஞான சங்கத்தைச் சேர்ந்த ஸ்ரீமதி ஹில்டாவுட் என்னும் ஐரோப்பிய மாது சமீபத்தில் பெங்களூரில் மாதர் கூட்டமொன்றில் மிக அழகாக உபன்யாஸஞ் செய்தார்—இதனை ஆநந்தபோதினி வைகாசி மாதம் 29-ந் தேதி பத்திரிகையில் வாசித்தோம்.

இப்பிரசங்கத்தை இந்திய மாதர்களும் சிறுமிகளும் படிக்கவேண்டியதும் இதன் கருத்துணர்ந்து நடக்கவேண்டியதும் அவசியமெனத் தெரிகிறபடியால் இதனை நம் பாலவிநோதினியில் பிரசுரிக்கலானோம்.

இது போன்ற தெளிவான நல்லுரைகளே இப்போது நம் தேசத்து மாதர்களுக்குத் தேவையாயிருப்பன. கற்றறிந்த இந்திய மாதர்கள் பலர் தங்கள் முயற்சிகளை இப்படிப்பட்ட உபதேசங்களிலே செலவழிப்பார்களானால் தமிழ் நாட்டு மாதர் எல்லா வழிகளிலும் மேன்மை யடைவார்கள் என்பதில் ஐயமில்லை.

## மாதர்களுக்கு இன்னொரு செய்தி

பெண்கள் கஷ்டங்கள் வருமுன் அவைகளைத் தாங்கத் தயாராயிருப்பதற்கும் வந்த பிறகு அதைச் சமாளிப்பதற்கும் சக்தி யுடையவர்களா யிருக்க வேண்டும். பெண்கள் கல்வி கற்றிருந்தால் அவர்களுக்கு இப்படிப்பட்ட சாமர்த்திய மிருக்கும்—என்று ராமநாதபுரம் ஜில்லா திருப்பத்தூர் நா. ம. ஆ. கலாசாலையில் ஆரம்ப ஆசிரியர் சங்கத்தின் ஆதரவில் சுகாதார இனிஸ்பெக்டர் ஸ்ரீ என். வெங்கட்டராமன் செய்த உபந்யாஸத்தால் தெரிய வருகிறது.

அநுபவத்திற் பார்க்கும்போது இனிஸ்பெக்டர் கூறுகிறபடி மாதர்களுக்குத் தற்காலக் கல்வியினால் அப்படிப்பட்ட திறமை யேற்படுவதாகத் தெரியவில்லை. அநுபவமுடைய வீட்டுப் பெரியாரிடம் பழகுவதால் அத்தகைய சாமர்த்தியம் ஏற்படுவதை நாம் காண்கிறோம்.

சுகஜீவனத்துக்கு முக்கியமான காற்று நல்ல ஜலம் புஷ்டியான ஆகாரம் தேகாப்பியாஸம், நித்திரை, தெய்வபக்தி, நல்ல சகவாசம், முதலானவை முக்கியமென்ற சங்கதியை அடிக்கடி ஸ்திரீகள் அநுஷ்டானத்திற் கொண்டு வருவது நலமென்று இனிஸ்பெக்டர் கூறுகிறார். இந்தப் போதனை சிறப்புடையதேயாகும். ஸ்திரீகளுக்கு இந்த ஒழுங்கைக் காப்பாற்றத் தக்க கல்வியே கற்பிக்கப்பட வேண்டுமென்று ஊகிப்பவர்க்கு விளங்காமலிராது. இந்தச் சுகாதாரம் ஸ்திரீகளாலேயே போற்றப்பட வேண்டியதா யிருக்கிறது.

## நாயால் வந்த தொல்லை

பம்பாயில் பெந்தி பஜார்க்கருகே ஒரு ஐரோப்பிய சார்ஜண்டு தமது நாயுடன் மே மாதம் 24ந் தேதி யன்று போய்க் கொண்டிருந்தார். அந்த நாய் ஒரு முஸ்லீமைக் கண்டு குலைத்தது. முஸ்லீம் அந்த நாயைக் கல்லால் அடித்தார். உடனே சார்ஜண்டு முஸ்லீமைத் துரத்திச் சென்று பிடித்து அடித்தார். அதனால் அங்கே ஏராளமான ஜனங்கள் கூடினர். அவர்கள் சும்மாவிருக்கவில்லையாம். சார்ஜெண்டைக் கல்லாலடித்தார்களாம். அதனால் அவர் தற்காப்பின் பொருட்டு ஜனங்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தாராம்.

இதனால் உடனே போலீஸ் படை ஒன்று அவ்விடம் வந்து சேர்ந்தது. ஜனங்கள் அவர்கள் மீது கற்களையும் சோடா பாட்டில்களையு மெறிய அவர்கள் துப்பாக்கியைப் பிரயோகம் செய்யக் கலகம் பலத்தது. அங்கே இதற்குள் 5000 ஜனங்களுக்குமேல் கூடிவிட்டார்கள். கலகம் பயங்கரமான நிலைமையிலிருந்து அடங்கியது. "ஆகா ஒரு நாயால் இந்தத் தொல்லையா?"—என்று யாவரும் வியப்புற்றனர்.

முன்னே பாரத மென்கிற இதிகாசம் ஒன்று புவியில் தோன்றியதற்கு ஆரம்பத்தில் ஏற்பட்ட காரணம் நாயின் தொல்லை யென்றே தெரிகிறது.

முன் காலத்தில் சௌமிகர் என்னும் பெயர் கொண்ட மகரிஷி யொருவர் ஸத்ரம் என்னும் பெரிய

வேள்வி செய்தார். அந்த வேள்வி பன்னிரண்டு வருஷ காலம் செய்யத்தக்கது. அந்த வேள்வி நடக்கையில் ஒரு நாள் தேவலோக நாயாகிய ஸாரமேயன் என்பது வந்தது. அந்த நாயை அங்கிருந்த அரச குமாரர்கள் அடித்துத் துரத்தினர். அது தன் தாயாகிய ஸரமையினிடம் போய்க் கூறிற்று. ஸரமை உடனே ஜனமேஜயனிடம் வந்து "என் பிள்ளை யாகசாலைக்கருகே வந்ததைத் தவிர வேறு ஒரு குற்றமும் செய்யவில்லை. அதனை யேன் அரச குயாரர்கள் அடித்தார்கள்? நிரபராதியை அடித்ததனால் உங்களுக்குத் தெரியாமலே ஓர் ஆபத்து வரும்" என்று சாபமிட்டுச் சென்றது. பின் அவ்வாபத்திலிருந்து தப்ப முயற்சிக்கையில் ஸர்ப்ப யாகம் செய்ய நேர்ந்தது. அது வெகு பிரமாதமானதாய் வளர்ந்து முடிவில் அநேகாயிரக்கணக்கான ஸர்ப்பங்கள் யாகாக்னியில் மடிய நேர்ந்தது. அற்பமென்று எதையும் நினைப்பது கூடாது. அற்பம் அபாரமாவதுண்டு.

---

அமெரிக்கா கோக்கமாவில்ஒரு ஸர்க்கஸ் மிருகக்காட்சி சாலையில் மிருகம் பழக்குகிறவன் மிருகக் கூட்டுக்குள் 32 சிங்கங்களையும் புலிகளையும் பழக்கிக் கொண்டிருந்தான். அப்பொழுது ஒரு புதியபுலி அவனைக் கடிக்கத் தொடங்கியது. அதுகண்ட, ஸர்க்கஸின் தலைமையான சிங்கம் துள்ளிக் குதித்துப் புலியைத் தாக்கிக் கீழேதள்ளி இரண்டு கடியும் கடித்தது, இதனால் ஏற்பட்ட சாவகாசத்தில் மிருகம் பழக்குகிறவனைக் காக்கப் பல ஆட்கள் வந்துவிட்டனர்

# ஆடிப்பதினெட்டும்
## அதன் மகிமையும்

மனமகிழ்ச்சியுடன் "பால விநோதினி" யைப் படிக்கும் மாணவ மாணவிகளே!

"ஆடிப் பதினெட்டு" என்பது, ஆடிமாதம் 18-ம் தேதியிலே காவேரியில் வெள்ளம் பெருகுவதைக் குறிப்பதாகும். ஏன், ஒவ்வொரு ஊரிலும் வாய்க்கால் வரப்புகளிலும் தண்ணீர் நிரம்பி வழிந்து ஓடுவதையும் குறிக்கும். இந்த வெள்ளத்தினாலே, எங்கும் உள்ள நிலங்கள் எல்லாம் தண்ணீர் பாயப்பெற்று, உழுது பயிர்செய்து, விளையச்செய்து, அந்த விளைவினாலே தானியங்களை வீடு கொண்டுவந்து வைத்துக் கொண்டு, வருடமுழுதும் சுகமாக வாழ்வதையும், வாழப்போவதையும் குறிப்பதாகும்.

நாம் சுகமாக வாழ்வதற்கு இந்த வெள்ளப் பெருக்குக் காரணமாய் இருப்பதனாலே, இதுவும் கடவுள் அருளாலே நமக்குக் கிடைப்பதனாலே, இதுவும் கடவுள் மயமாய் இருப்பதனாலே, இதனையும் கடவுளாகவே மதித்து, நம் தமிழ்நாட்டில் உள்ள இந்துக்கள் என்பவர்கள், காவேரி வெள்ளத்தைக் கங்காதேவியாக மதித்து, அந்த நாளிலே பச்சை அரிசி, தேங்காய்

பழம், காதோலை, கருகுமணி முதலியன கொண்டு சென்று, சுத்த நீராடி அங்கு ஆற்றிலே வைத்துப் பூசித்து, இவ்வருடம்போல் இனி எவ்வருடமும் தண்ணீர் குறைவில்லாமல் வந்து எங்கள் நிலங்களை விளையச் செய்து, எங்கள் சுகத்திற்கு உதவியாயிருத்தல் வேண்டும் என்று தியானித்து வீடு திரும்பி, படைத்த பொருள்களைப் பலரும், பிள்ளைகுட்டிகள் மாப்பிள்ளைமார்கள் உடனும், பலகார பட்சணங்கள் உடனும் புசித்தும், புது ஆடைகள் புனைந்தும் மகிழ்ந்து இருப்பர்.

சில பாமரமக்களோ, பகுத்தறிவு இல்லாதவர்களோ, அன்றுதினம் விசேஷமாகக் கள், சாராயம் குடித்தும், மாமிசம் புசித்தும், வெறிபிடித்தும் அலைவர். கள் சாராயம் முதலிய போதைகளைக் குடிப்பவர்கள். 'ஒரு அரிசிக்காக ஒரு சாக்கு உமியைச் சாப்பிடுகிறவர்களுக்கு ஒப்பாவார்கள்.'

சிலர், தாம் கொஞ்சமாய்—அளவாகத்தான் குடிப்பதாகக் கூறுவார்கள். இந்தக் கொஞ்ச அளவு, வரவரக் கொஞ்சங் கொஞ்சமாய் அதிகமாகிப் "பல துளி பெருவெள்ளம்" ஆவதுபோல், வீசங்குடி அரைக்கால்குடியாகி, அரைக்கால்குடி கால்குடியாகி, கால்குடி அரைக்குடியாகி, அரைக்குடி முழுக்குடியாகி அதற்கு மேலும் ஆகி ஆண்டியாக்குவது-ஆண்டியாவது தெரிவதில்லை.

இப்படி நம் ஜனங்கள் குடித்துச் சீரழிந்து கெட்டுப்போவது தெரிந்தும், கண்ணாரக் கண்டும்,



" சேராத இடந்தனிலே சேரவேண்டாம் "
" நல் இணக்கம் அல்லாரோடு இணங்கவேண்டாம் "

என்பவைகளையும் மறந்து, பன்றியோடு சேர்ந்த கன்று போல், சேரத்தகாதவர்களோடு சேர்ந்து கெட்டுப்போய், சிரிப்பாய்ச் சிரித்து, சீலைப்பேன் குத்தி, மானமழிந்து, மதிகெட்டு, போனதிசை எல்லாக்குங் கள்ளனாய்க் கெட்ட பேர் எடுத்து நாசமாவதைப் பார்க்க—பார்த்தவர்க்கும் பார்ப்பவர்க்குங் கூட நாணம் உண்டாகிறதே!

" தீயாரைக் காண்பதுவும் தீதே திருவற்ற
தீயார்சொற் கேட்பதுவும் தீதே தீயார்
குணங்கள் உரைப்பதுவும் தீதே அவரோடு
இணங்கி யிருப்பதுவும் தீது. "

என்று நம் ஔவைப்பிராட்டியார் அறிவுறுத்திப் போயிருக்கின்றாரே. நாமெல்லாம் அவருடைய வாக்கைக் கவனித்து அதன்படி நடந்தால் நமக்கு நன்மையுண்டாம்.

" வாக்குண்டாம் நல்லமனம் உண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது."

என்பவைகளையும்,

" நல்லாரைக் காண்பதும் நன்றே-நல்லார்
குணங்கள் உரைப்பதும் நன்றே-அவரோடு
இணங்கி யிருப்பதுவும் நன்றே ."

என்பவைகளையும் கவனித்து அதன்படி நடந்து நாம் நலம் பெறுவோமாக.

இங்ஙனம்: உங்கள் பிரியமுள்ள,

P. பரிமணப் பல்லவராயர்
ஹெட்மாஸ்டர், போர்டு இந்து பெண்பாடசாலை,
திருவெறும்பூர், திருச்சி தாலுகா.

# கணவனோ டெதிர் பேசாதிருப்பதே மனைவிக்கழகு

ஒரூரில் சாந்தகுணமுள்ள வேளாள னொருவனிருந்தான். அவன் மனைவி கெட்ட குணங்களுள்ளவள்; புருஷனை மதிப்பதில்லை; அவனை ஆட்டிப் புடைப்பதில் மகாசமர்த்தி. அவளுக்கு அவன் பயந்து அவளிடம் வேலைகளையெல்லாம் உடனுக்குடன் செய்து வருவான். ஒரு நாள் அவன்வீட்டுத் தெருத்திண்ணைமேல் ஔவை மெத்த களைப்போடு வந்து தங்கினாள். அவளை அந்த வேளாளன் கண்டான். “ஆயா நீ எங்கிருந்து வருகிறாய்; பசியோடிருப்பதுபோல் தோன்றுகிறதே. எங்கள் வீட்டில் அன்னம் படைக்க என் மனைவிக்குச் சொல்லுகிறேன்; சாப்பிட்டுக் களைதீர்ந்து பிறகு நீ போகவேண்டிய இடத்துக்குப் போகலாம்” என்று மிகவும் வணக்கமாய்க் கேட்டான்.

அவன் வார்த்தைக்கு மகிழ்ந்த ஔவை ‘அப்படியே ஆகட்டும்’ என்று ஒப்புக்கொண்டாள். வேளாளன் ‘இதோ நான் உள்ளேபோய் வருகிறேன். இங்கேயே சற்றுநேரம் படுத்துக்கொண்டிரு’ என்று சொல்லிவிட்டு வீட்டுக்குள் புகுந்தான். மனைவி சந்தோஷமாயிருக்கக் கண்டான். இதுதான் நல்ல சமயமென்று நினைத்து அவளை நோக்கி “தலை வாரிக்கொள்ளவில்லையா?” என்று மெதுவாகக் கேட்டான். அவள் ‘ஆம், வாரிக்கொள்ளவேண்டும்; உட்கார மணை



யெடுத்துப்போடு; எண்ணெய், சீப்பு, ஈர்க்கொல்லி, கண்ணாடி கொண்டுவா” என்றாள். அவள் சொன்னபடி யாவும் சித்தப்படுத்தி அவளை மணைமேல் உட்கார வைத்து, தான் அவள் பக்கத்திலிருந்து அவளுடைய கூந்தலை யவிழ்த்து எண்ணெய் தடவி, சீவிச் சிக்கறுத்து மெதுவாக அவள் காதில் தன் வாயைவைத்து “ஒரு தள்ளாத கிழவி பசியோடு நமது தெருத்திண்ணையில் படுத்துக்கொண்டிருக்கிறாள். கொஞ்சம் சாப்பாடு போட்டால் நலமாயிருக்கும்” என்று சொல்லி வாய் மூடுவதற்குள் அவள் முடுக்காய்த் தன் முகத்தைத் திருப்பி அவனை ஏற இறங்கப்பார்த்து “ஆஹா! உன்கேடுக்கு ஒரு விருந்து கூடவா? உனக்கு வடித்துக்கொட்டுவது மல்லாமல் வழியேபோகிற கிழவிக்குமா என்னை வடித்துக்கொட்டத் திட்டஞ் செய்கிறாய்” என்று தன் வாய்க்குவந்தபடி சிறிதும் மரியாதையின்றிக் கூச்சலிட்டுப் பேசி முன்பின் பாராமல் அவனை முறத்தாலும் விளக்குமாற்றாலும் துரத்திக் கொண்டேபோய்த் தன் கைசலிக்குமட்டும் புடைத்து “உன் பவிஷுக்கு விருந்து மொன்றா?” என்று ஓய்ந்தாள். பிறகு கொஞ்சநேரம் பொறுத்து அவனை அதட்டிக் கூப்பிட்டு “எங்கே அந்தக் கிழவி; கூப்பிடு சாப்பிட” என்று கூறி இலையொன்றுபோட்டு அதில் அன்னம் வட்டித்தாள்.

இவளுடைய வேடிக்கையை முழுதுங் கவனித்த வண்ணமிருந்த ஔவையை அந்த வேளாளன் “ஆயா! சாப்பாடு போட்டிருக்கிறது. வந்து சாப்பிடலாம்”

என்று அன்போடு அழைத்தான். ஔவை எழுந்து போய் இலையண்டை உட்கார்ந்து அதை நோக்கி,

"காணக்கண் கூசுதே கையெடுக்க நாணுதே
மாணொக்க வாய்திறக்க மாட்டேனென்குதே—வீணுக்கென்
என்பெல்லாம் பற்றி யெரிகுதே ஐயயோ
அன்பில்லா ளிட்ட வமுது"

என்று சொல்லி வேளாளனைப் பார்த்து "சாந்தகுணங் கொண்ட உனக்கு இந்த வாய்ப்பட்டியை மனைவியாக அமைத்த பிரமதேவனை இப்போது நான் சந்திக்க நேர்ந்தால் "அற்றதலை போக அறாததலை நான் கினையும், பற்றித் திருகிப் பறியாதிரேன். இவளோடு கூடி நீ வாழ்வதைப் பார்க்கிலும் சந்நியாசம் பெற்றுக் கொண்டு நிம்மதியாக உன் காலத்தைக் கழிப்பதே நல்லது" என்று சொல்லிவிட்டு நீங்கினாள்.

ஒருவனுக்கு மனைவியாக வந்தவள் அவன் சொல்லுக்குக் குறுக்கே ஒன்றும் சொல்லாமல் அவன் இஷ்டம் போல் நடக்கவேண்டும். ஆகையினாலேதான் 'பெண்டிர்க்கழ கெதிர் பேசாதிருத்தல்' என்னும் கட்டளை பிறந்தது.

---

மகாத்மா காந்தி சிறைச்சாலையில் தமக்கு ஆகாரமாக வெள்ளாட்டுப்பால், பேரீச்சம்பழம், திராட்சைப்பழம், ஆரஞ்சுப்பழம், இவைகளை உபயோகித்து வருகிறாராம். தினந்தோறும் அவர் ஆறு அல்லது ஏழுமணிநேரம் நூல் நூற்று வருகிறாராம்.

# பூமியும் பூபதியும்

உயிர்க்குத் தரித்திர மில்லாமற் காப்பது பூமி. பசித்தபேர்க்கு அன்னமாவதும் பூமி. யாகாதி வேத முதலியவற்றிற்கு ஆதார பூதம் பூமி. பிணி, ரோகம், பீடை இவை முதலியவற்றை நீக்கி வைப்பது பூமி. வேறொரு விபத்துமில்லாமற் சகல சம்பத்தையுங் கொடுக்கிறது பூமி. பஞ்சேந்திரிய விஷயராகிய பேர்களுக்குப் போகத்தை யுண்டாக்குவது பூமி. பஞ்சேந்திரிய நிக்கிரஹம் பண்ணிய பேர்களுக்குப் பதவி பெறுதற் காதாரவாகிய தசை வளர்ப்பது பூமி. மும்மூர்த்திகளும் தங்களுக்காக வேண்டிய காரியத்தை முடித்துக் கொண்டு போவதற்கு முக்கியமா யிருப்பது பூமி. இப்பேர்ப்பட்ட பூமியை யாளுகிற ராஜன் சகல கீர்த்தியும் பிரதிஷ்டையும் அடையப்பெறுவான். இன்னும் இந்தப் பூமியின் பெருமையைச் சொல்கிறேன், அருமையாய்க் கேள். இப் பூமியானது பொன், வெள்ளி முதலான நவலோகங்களுக்கும் உற்பவ கர்ப்பமா யிருக்கின்றது. அன்றியும் கரும்பொன்மலை, வெண் பொன்மலை, பசும் பொன்மலை இவை முதலிய வெகு மலைகள் இப்பூமியிலிருக்கின்றன. நவரத்தினங்களுக்கும் உற்பத்தி ஸ்தானமா யிருக்கின்றது. மேலுமிப்பூமி பற்பல கோடி மரங்கள், கொடிகள், செடிகள், ஔஷதிகள் சஞ்சீவிகள் முதலியவைகளோடு, காடுள்ள ஒரு திருடர், இரண்டு கதிர், மூன்று தேவர், நான்கு திசை, ஐந்து பூதம், ஆறு மதம் ஏழு சமுத்திரம், எட்டு மலை, ஒன்பது கிரகம், பத்து

அவதாரம், பதினொரு ருத்திரர், பன்னிரண்டு சூரியர், இவைகளுடனே, மூன்றுகோடி அறுபத்தையாயிரந் தீர்த்தங்களையும் அநேகம் பறவை மிருகங்களையுந் தன்னிடத்திலுண்டா யிருப்பது. இராஜ ராஜர்களுக்குக் கோட்டை, கொத்தளம், கொம்மை, அகழ் இவை முதலியவற்றைத் தன் மேல் வைத்துக்கொண்டு, இராஜாக்களைக் காப்பது. எவரெவ ரெப்படி நினைத்தாலும் அவரவருக்கு அந்தப்படி விளைப்பது. சகல பண்டங்களுந் தன்னிடத்திலுண்டாக்கித் தாய்போலருத்தி வைப்பது. எண்பதினாயிரம் யோசனை கனத்தை யுடையது. இப்பேர்ப்பட்ட பூமியை ஆளுகிற அரசனுக்கு என்ன குறைச்சல்? தன்னை அமராபதி, அளகாபுரிக் கொப்பாய் அரசாட்சி செய்யும் அரசனுக்குத் தக்கபடி உதவிபண்ணிக்கொண்டிருக்கும் பூமியையும், உழுது பயிரிடுங் குடிகளையும் தன் பிராணன்போற் காப்பாற்றிக் கொள்ளுங் கடைமை ராஜனுடைய உடைமை. இவ்வாறு காக்கின்ற அரசனுக்கு, கோட்டை, கொத்தளம், கொடி, முடி, வாழ்வு, சம்பத்து எல்லாம் பலிக்கும். பூமியைப் பாழ்படுத்திப் பூமி பாலகரை வருத்தப்படுத்தினால் பொக்கிஷங் குறையும். இலக்குமி விலகுவள்.

(பாரதம்.)

பாலவிநோதினியை ஆதரியுங்கள். குழந்தைகளின் அறிவின் அபிவிருத்தியை நாடி வெளிவரும் பத்திரிகை இது ஒன்றுதான். இதில் சிறு கதைகள் மூலமாகவும் பெரியார் திருவாக்குகளின் மூலமாகவும் நற்போதங்கள் பல வெளிவருகின்றன. ஆதலால், குழந்தைகள் இதைப் படிப்பார்களானால் அறிவிலுயர்ந்து நற்குணசாலிகளாவார்கள்.

## புருஷனுக்குத் தூக்கு தண்டனை

மதவத்தூர் சவரிமுத்து என்பவன் தன் மனைவி அருளாயி என்பவளைக் கொன்றதாகக் குற்றம் ஏற்படுத்தி அவனைத் தூக்குப் போடும்படி கனம் செஷன்ஸ் ஜட்ஜ் தீர்ப்பு சொன்னார்.

சுருக்கமாக வழக்கு என்னவென்றால், எதிரி சென்ற வைகாசி மாதம் லால் குடிக்கு அடுத்த பெருவள நல்லூரில் அருளாயி என்ற பெண்ணைக் கலியாணம் செய்து கொண்டான். மார்கழி மாதம் சவரிமுத்து தன் மனைவியுடன் அவள் தாய் வீட்டிற்கு வந்தாள். ஆனால் அங்கே அவளுக்கு உடம்பு அசௌகரியமாய்ப் போய்விட்டதால் அவனுடன் திரும்பி மதவத்தூருக்குப் போக சாத்தியமில்லை. சவரிமுத்தும் அவன் தாயாரும் அருளாயின் தேகஸ்திதி பார்க்க இடையில் இரண்டொரு தடவை வந்தார்கள். கடைசியாக ஜனவரிமாதக் கடையிசில் சவரிமுத்து வந்தபோது அவளுக்கு உடம்பு அனுகூலமாயிருந்தபடியால் ஜனவரி மாதம் 29-ந்தேதி சாயந்திரம் புருஷனும் மனைவியும் ஊருக்குப் புறப்பட்டார்கள்; இராத்திரி வெள்ளனூரில் தங்கினார்கள். பிற்பாடு எப்படி இருவரும் பிரிந்தார்களோ தெரியவில்லை. அருளாயி சவம் விளாகம் கிராமத்தில் ஒரு குட்டையில் கிடந்தது. மேலே 4 காயங்களும் இருந்தன. ஜனவரி 31-ம் தேதி சவரிமுத்து, தான் மாத்திரம் மதவத்தூர் வந்து

தன் மனைவி காணாமல் போனவிதம் யாதொன்றும் சொல்லாமல் காணவில்லை என்றான். இவன் சரியான முகாந்தரம் சொல்லாததால் போலீசார் இவனைக் கைதுசெய்து இவன் உடுத்தியிருந்த துணியைப் பரிசோதனைக்கு அனுப்ப அதில் ரத்தம் கண்டுபிடிக்கப்பட்டது. மேலும் இவன் மேல் போட்டிருந்த பனியன் அவன் மனைவி வாயில் அடைத்திருந்தது. ஊருக்கு வந்தவன் தன் மனைவி காணவில்லை என்று யாதொரு பிரயாசையும் எடுத்துக்கொண்டு தேடவில்லை. இந்த சந்தர்ப்பமெல்லாம் உத்தேசித்து தன் மனைவியைக் கொன்றவன் புருஷனே என்று தீர்மானித்துச் சவரிமுத்துக்கு ஜட்ஜ் தூக்குத் தண்டனை விதித்தார்.

---

## ஓர் ஆச்சரிய விவாகம்.

பிரான்ஸ் தேசத்தில் கொலைக்குற்றத்திற் காளாகிறவர்களை ஆயுள்பரியந்தம் சிறைச்சாலையில் அடைப்பதேயன்றித் தூக்கிட்டுக் கொல்வதில்லையாம். பொதுவாகக் கைதிகள் யோக்கியமாக நடந்துகொண்டால் அவர்கள் சிறைச் சாலையிலேயே விவாகம் செய்துகொண்டு வாழ்வதற்குச் சட்டமிருக்கிறதாம். அப்படிப்பட்ட விவாகம் ஒன்று நடந்ததாம். அவ்விவாகத்தில் மணமகன் தன் மனைவியைக் கொன்று குற்றவாளியானவனும். மணமகள் தன் மாமியாரைக் கொன்று குற்றவாளியானவளாம்.

இஃது விநோதத்தினும் விநோதமானதும்— இது விளக்கும் கருத்து யாதெனில்—யோக்கியனுக்கு எங்கும் எந்த நிலையிலும் நன்மை கிடைக்குமென்பதேயாம். ஆகையினாலேதான்—

“ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம், உயிரினும் ஓம்பப்படும்”—என்று உபதேசித்தார் திருவள்ளுவர்.

# FREE HERBAL CURE

## இலவச மூலிகை சிகிச்சை

Atshma என்னும் கொடிய வியாதி எவ்வளவு நாட்பட்டதாக இருப்பினும் இச் சிகிச்சையால் உடனே குணமடைந்து விடுகிறது. இவ்வரிய வைத்தியமானது பிரதி ஞாயிறு வியாழன் இந்த இரண்டு தினங்களில் பொள்ளாச்சிதாலுகா நெகமம் கிராமத்திற்கு மேற்கே 3 மையில் தூரத்துள்ள தேவணம்பாளயம் கிராமத்தில் ஸ்ரீமான் பழனிச்சாமிக் கவுண்டர் அவர்களின் தாயாரால் காலை 6 மணி முதல் 10 மணிவரை நடத்தப்படுகிறது. நூற்றுக் கணக்கான வியாதியஸ்தர்கள் பிரதி வாரமும் வந்து வைத்தியம் செய்துகொண்டு குணமடைந்து வருகிறார்கள். முதலில் வியாதியஸ்தர் வந்தவுடனே குளிக்கும்படி செய்து அவர்கள் முதுகில் மஞ்சளும் பச்சிலையும் தேய்த்தவுடனே தேய்த்த இடங்களில் ஆயிரக்கணக்கான சிறு சிறு முட்கள் வெளிவருகின்றன. அவைகளைக் களைந்து எறிந்து விடுகிறார்கள்.

இந்த 6 மாதத்தில் இவ்விடம் வந்து வைத்தியம் செய்து குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 883. இவர்கள் யாவரும் குணமடைந்திருக்கிறார்கள். சிகிச்சைசெய்துகொள்ளுபவர்கள் இதற்காக யாதொரு கட்டணமும் செலுத்த வேண்டியதில்லை. பிரியப்பட்டவர்கள் ஏழைகளுக்கு சாப்பாடு போடுவதற்கென

வைத்திருக்கும் உண்டியலில் தமக்கு இஷ்டமானதைச் செலுத்தினாலும் சரி செலுத்தாவிட்டாலும் சரி. அதிக ஏழையாய் இருப்பவர்களுக்கு ஸ்ரீமான் பழனிச்சாமிக் கவுண்டர் அவர்களால் சொந்தச் செலவில் வேண்டிய உதவிசெய்யப் பட்டுவருகிறது. அன்னாரின் செய்கை மிகவும் போற்றத் தக்கதே.

பெரிய பெரிய ஆயுர்வேதப் பட்டம் பெற்ற ஆங்கில நிபுணர்களாலும் ஆயிரம் ஆயிரம் ரூபாயாகச் செலவழித்துப் பார்த்தும் தீராத இந்தக்கொடிய வியாதியானது ஒருநிமிஷத்தில் இலவசமாகச் செய்யும் பச்சிலையின் விசேஷத்தால் உடனே குணமாவது மிகவும் குறிப்பிடத்தக்கதே.

ஸ்ரீமான் பழனிச்சாமிக் கவுண்டருக்கும் அடியாரின் தாயார் அவர்கட்கும் எல்லாம் வல்ல இறைவனைத் தீர்க்காயுள் அருளுமாறு வேண்டுகிறேன் என நேகமம் ஸ்ரீமான் கே. முத்துசாமிபிள்ளை அவர்கள் எழுதுகிறார்.

(இந்து நேசன்.)

## வசீகரமுள்ள பல் வைத்தியர்கள்

இக்காலத்தில் மாதர்கள் அனேகர் பல் வைத்தியர்களாகத் தேறிவருகிறார்கள். சமீபத்தில் பல் வைத்தியர் சங்கத்தின் ஐம்பதாவது ஆண்டு விழா நடைபெற்றபோது சுமார் நாலாயிரம் பேர் கூடியிருந்தனர். அதில் 300-பேர் மாதர்கள். மாதர்களிடம் தான் குழந்தைகளும் சந்தோஷமாகவும் தைரியமாகவும் பல் வைத்தியம் செய்து கொள்கின்றன. ஆகவே அவர்கள்தான் இப்போது வசீகரமுள்ளவர்களாக இருக்கிறார்கள்.

210788
சென்னை 600 008

# ாலவிநோதினி

## குழந்தைகளின் அன்பன்

| | | |
|---|---|---|
| ருட சந்தா தபாற் கூலி யுள்பட | இந்தியா, பர்மா, சிலோன் | ... ரூ. 1 8 0 |
| | பினங்கு, சிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு | ... ரூ. 2 0 0 |
| தனிச்சஞ்சிகை | ... | ... விலை ரூ. 0 2 0 |

1. பத்திரிகைக்கு ஜனவரீ முதல் டிசம்பர்ீ வரையில் ஒரு வருஷக்கணக்கு. எந்த மாதத்தில் சேர்ந்தாலும் ஜனவரி மாதம் முதற்கொண்டே சஞ்சிகைகள் அனுப்பப்படும். ஒரு வருஷத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது.

2. சந்தாதாரராய்ச் சேருகிறவர்கள் முழு விலாசத்தையும் தெளிவாய் எழுதியனுப்பவேண்டும்.

3. சந்தாத்தொகையை முன்னடி செலுத்தியாவது அல்லது வி. பி. யில் கட்டியாவது பத்திரிகையைப் பெற்றுக் கொள்ளலாம்.

4. வி.பி. யில் பெற்றுக் கோள்வதானல் அணு மூன்று அதிகமாய்ச் செலவாகிறபடியால் சந்தாத்தோகையை மணியார்டர் செய்வதே நலம். இது முக்கியமாய்க் கவனிக்க வேண்டியது.

5. யாருக்கேனும் சஞ்சிகை சேராவிட்டால் ஒரு மாதத்திற்குள் தெரிவித்தால்தான் மறுபடி யனுப்பக்கூடும்.

6. இடம்மாறும் சந்தாதாரர்கள் அடுத்த சஞ்சிகை தங்களுக்குப் புதுவிலாசத்திற்கு வந்து சேரும் வண்ணம் தபாலாபீஸோடு ஏற்பாடு செய்துகொண்டு நமக்குப் புதுவிலாசத்தை அறிவிக்கவேண்டும்.

7. சந்தா நெம்பரைக் குறிக்காமல் எழுதும் கடிதங்கள் கவனிக்கப்படமாட்டா.

### விளம்பர விகிதம்

| | | |
|---|---|---|
| ஒரு பக்கத்திற்கு | ஒரு மாதத்திற்கு | ...ரூபா 10—0—0 |
| அரைப் பக்கத்திற்கு | ,, | ... ரூபா 5—0—0 |

காண்டிராக்ட் ரேட்டானல் சகாயமுண்டு.

விலாஸம்:—மானேஜர்—பாலவிநோதினி ஆபீஸ்,
323, திருவொற்றியூர் ஹைரோட், சென்னை.

# அமிர்தாஞ்சன

சர்வ நோய்களுக்கும்

ஸித்த ஔஷதம்




விலை அணா 10 அணா 0-10-0

இருபத்தைந்து வருஷமாக
லக்ஷக்கணக்காக விற்று வருகிறது
அபூர்வ மூலிகைகளினால் தயார் செய்யப்பட்டு
அழகாய் பாக்கிங்செய்து உபயோகத்துக்குத் தயாராய்

## எல்லா நோய்களுக்கும்

ஒரு கைகண்ட ஔஷதம் அமிர்தாஞ்
சனமே. தலைவலி, முதுகுவலி, கீல்பிடிப்பு முத
லிய சகலநோய்களையும் நொடிப்பொழுதில் தீர்க்கும்.

**அமிர்தாஞ்சன் டிப்போ,**

**7, தம்புச்செட்டி தெருவு, சென்னை.**


Vavilla Press, Madras.